# நாடு கடந்த
# தமிழீழ அரசாங்கத்தின் உருவாக்கம்

## மதியுரைக்குழுவின் ஆய்வின் அடிப்படையில்
## உருவான இறுதி அறிக்கை

**19 மார்ச் 2010**

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உருவாக்கம்

## மதியுரைக்குழுவின் ஆய்வின் அடிப்படையில் உருவான இறுதி அறிக்கை

**பொழிப்பு**

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான பின்னணியினை இந்த அறிக்கை முதலில் விளக்குகின்றது. இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளினையும், இறைமையையும் தன்னாட்சியையும் வெளிப்படுத்த உரிய அரசியல் வெளி காணப்படாமையினாலேயே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒன்றின் தேவை எழுகின்றது என அறிக்கை அறிவுபூர்வமாக முன் வைக்கின்றது. நாடு கடந்த அரசாங்கத்தின் கோட்பாட்டு அடிப்படைகளும் விவரிக்கப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் பணிகள், அது உருவாக்கப்படும் வழிமுறைகள், அதன் வழிகாட்டிக் கோட்பாடுகள், நாடு கடந்த தமிழீழ அரசவையின் அமைப்பு வடிவம், நேரடியான வாக்களிப்பு முறையின் பயன்கள் என்பன விளக்கப்படுகின்றன. இளைஞர்களினதும் பெண்களினதும் பங்களிப்பை அறிக்கை வலியுறுத்துகிறது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்குவது தொடர்பில் தேர்தல் ஆணையம், நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்கள், வாக்காளர் தகைமை, வேட்பாளர் தகைமை மற்றும் அவர்கள் பணியாற்றும் பாங்கு என்பனவற்றினைப் பற்றியும் அறிக்கை விவரிக்கின்றது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு வலு மையமாக உருவாகுவதற்கான சாத்தியப்பாடுகள், ஏனைய புலம்பெயர் தமிழ்மக்களின் நிறுவனங்கள், மக்கள் அமைப்புக்களுடனான அதன் உறவு, அனைத்துலக சமூகத்துடனான ஊடாட்டம் போன்றவை தொடர்பாகவும் இவ்வறிக்கை விளக்கம் அளிக்கிறது. முஸ்லீம் மக்களுடனான உறவுகள் பற்றிய சிறப்புக்கவனத்தினையும் அறிக்கை முன்வைக்கிறது. தென்னாசியாவின் புவிசார் அரசியற் சூழலைப்பற்றியும் அறிக்கை கருத்துரைக்கிறது. முடிவாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் யாப்பில் இடம்பெறவேண்டும் என ஆலோசனைக்குழு கருதும் வழிகாட்டிக்கோட்பாடுகள் பற்றி விவரிக்கப்படுகிறது.

### 1. பின்னணி

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே இந்திய வம்சாவளித் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்டதும், சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டதும், தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டதும், தமிழர்களது அமைதி வழிப் போராட்டம் வன்முறையினைப் பிரயோகித்து கொடுமையான முறையில் நசுக்கப்பட்டதுமாகப் பல்வேறு வழிகளில் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்துள்ளனர். ஆட்சிபீடமேறிய தலைவர்களின் ஆதரவுடனும் நெறிப்படுத்தலுடனும் 1958, 1960, 1977, 1983 எனத் தொடர்ச்சியாகவே தமிழ்மக்களுக்கு எதிராக

இனக்கலவரங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு வந்துள்ளன. ஈழத்துக் காந்தியென எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டு வந்த திரு சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்கள் 1975இல் நடைபெற்ற காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற போது பின்வருமாறு அறிவித்தார்:

> 'கடந்த 25 ஆண்டுகளாக சிங்களவரோடு சமத்துவமாக இலங்கையில் வாழ்வதற்கான அரசியல் உரிமையைப் பெறுவதற்கு எல்லாவகையான முயற்சிகளையும் எடுத்து வந்துள்ளோம்.....ஆனால் வருந்தத்தக்க உண்மையெதுவெனில் அடுத்தடுத்து வந்த சிங்கள அரசாங்கங்கள் சுதந்திரம் மூலம் வந்தடைந்த அதிகாரத்தினை, எமக்குரிய அடிப்படை உரிமைகளை மறுக்கவும் எம்மை ஒரு ஆளப்படும் மக்களென்ற நிலைக்குத் தள்ளவுமே பயன்படுத்தி வந்துள்ளன. தமிழ் மக்கள் ஏற்கனவே கொண்டுள்ள இறைமையைத் தமிழீழத் தேசம் கையிலெடுத்து தம்மைத்தாமே விடுவிப்பதற்கான ஆணையாகவே இத் தேர்தலின் முடிவினை நான் கருதுகிறேன்.'

செல்வநாயகம் அவர்களின் தேர்தல் வெற்றியினைத் தொடர்ந்து அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் வட்டுக்கோட்டையில் ஒன்றுகூடி வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர். இத் தீர்மானம் 1976 ஆம் ஆண்டு மே மாதம் 14ம் திகதி நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. 1977 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தேர்தல் பங்குபற்றல் அத் தீர்மானத்திலேயே நங்கூரமிடப்பட்டிருந்தது. இத் தீர்மானத்தில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இறைமையுள்ள தமிழீழ அரசை அமைக்கும் தனது எண்ணத்தை வெளிப்படுத்தியது. இம் மாநாட்டிற்கு சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்கள் தலைமை வகித்தார். இத் தீர்மான வாசகங்கள் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறது:

*ஒவ்வொரு தேசிய இனத்தினதும் உள்ளியல்பான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறைமை பொருந்திய சமயச்சார்பற்ற சமதர்மத் தமிழீழ அரசை மீட்டளித்தலும் மீளஉருவாக்குதலும் இந்நாட்டில் தமிழ்த்தேசிய இனம் உளதாயிருத்தலைப் பாதுகாக்கும் பொருட்டுத் தவிர்க்கமுடியாததாகியுள்ளதென இம்மாநாடு தீர்மானிக்கின்றது.*

சுதந்திரத்துக்கான இப் புனிதப் போரில் தம்மை முழுமையாக அர்ப்பணிக்க முன்வரும்படியும் இறைமையுள்ள தமிழீழ அரசு என்ற இலக்கு எட்டப்படும்வரை அஞ்சாது போரிடும்படியும் பொதுவில் தமிழ்த் தேசிய இனத்துக்கும் குறிப்பாகத் தமிழ் இளைஞர்களுக்கும் அம்மாநாடு அறைகூவல் விடுவதாக இத்தீர்மானம் கூறிமுடித்தது. 30 ஆண்டு காலமாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில் ஈழத்தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்காக மேற்கொண்ட நியாய பூர்வமான முன்னெடுப்புக்கள் யாவும் சிறீலங்கா அரசும் அதன் படையினரும் எல்லாவகை மானிட விழுமியங்களையும் மீறிய வகையில் மேற்கொண்ட அதீத இராணுவ ஆக்கிரமிப்பினால் பலத்த பின்னடைவினைக் கண்டுள்ளன. வன்னிப் பிராந்தியத்தில் தமிழர்கள் மீது

கட்டவிழ்த்து விடப்பட்ட கொலைக்களரியானது முழு உலகையுமே பேரதிர்ச்சியிலும் ஆழ்ந்த வேதனையிலும் அமிழ்த்தியுள்ளது.

இன்னும் குறிப்பாகச் சொன்னால் பாவனைக்குத் தடைசெய்யப்பட்ட கனரகப் போராயுதங்களினாலும் இடையறாது வீசப்பட்ட எறிகணைகளாலும், பீரங்கிக் குண்டுகளினாலும் பல்லாயிரக்கணக்கான தமிழப் பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் வைத்தே 2009 இல் கொன்று குவிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை சிங்கள இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்ட சிறை முகாம்களில் வன்னடைப்புச் செய்து சித்திரவதைக்கு உள்ளாக்கியது. ஐக்கிய நாடு சார்ந்த நிறுவனங்களும், பன்னாட்டு அரச நிறுவனங்களும், செய்தியாளர்களும் இந்த முகாம்களுக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தமிழின அடையாளம் கொண்டவர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே இப் பொதுமக்கள் அடைத்து வைக்கப் பட்டுள்ளார்கள்.

முகாம்களினுள்ளேயுள்ள நிலை மிகமிக மோசமானது. ஐ.நா.வின் கூற்றின்படி தடுப்புக்காவலின் ஆரம்பநிலையில் பட்டினியால் சிலர் இறந்திருக்கின்றார்கள். மன்னிப்புச் சபையின் கருத்தின்படி சில பெண்கள் தமக்குப் பழக்கமில்லாதவர்களின் முன்னிலையில் பிரசவம் செய்ய வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். உணவு, நீர் பற்றாக்குறை, இறந்தவர்களின் உடலங்கள் வீழ்ந்த இடத்திலேயே கைவிடப்பட்ட நிலை, பெண்கள் தமது குடும்பங்களிலிருந்து பிரிக்கப்படுவதும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதும் போன்ற அதிர்ச்சி தரும் தகவல்களை பிரித்தானிய தொலைக்காட்சி செய்தி நிறுவனமான Channel 4 வெளிக் கொணர்ந்திருந்தது. சென்ற ஆண்டின் இறுதி வாரங்களில் பல்வேறு அழுத்தங்களின் காரணமாக தடுப்பு முகாம்களில் இருந்த பெருந்தொகையான மக்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்ட போதும் இவர்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் நிரந்தரப்பயத்தின் மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள். அர்த்தமுள்ள புனர்வாழ்வோ சொந்த வீடுகளுக்குத் திரும்புவதற்கான அனுமதியோ இன்னும் இவர்களுக்கில்லை.

முகாம்களுக்கு வெளியே வாழும் தமிழர்களின் பாதுகாப்பும் நலனும் எவ்வகையிலும் மேம்பட்டதாக இல்லை. தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான வடகிழக்கு நடைமுறையில் ஒரு ஆக்கிரமிப்புப் பிரதேசமாக படையினராலும் படைமுகாம்களாலும் சூழப்பட்டுள்ளது. சிறீலங்காவின் தெற்குப் பகுதியில் சிங்களப் பேராதிக்கக் கட்டுப்பாட்டில் தமிழ் மக்கள் பாதுகாப்பற்று, பயமுறுத்தப்பட்டு, பல்வேறு இம்சைகளுக்கு உள்ளாக்கப்படுதல் நாளாந்த நிகழ்வாயுள்ளது. தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காவே இவர்கள் குறி வைக்கப்படுகின்றனர். நன்கு திட்டமிடப்பட்ட கொலைகள், ஆட்கடத்தல், காணமல் போதல், வன்மையான அடையாள அழிப்பு, தமிழீழ நிலப்பறிப்பு, இனச்சுத்திகரிப்பு போன்றவற்றினால் தமிழ் மக்களின் தேசிய இனத்துவ முழுமை சிதைக்கப்பட்டு வருகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தினால் தமிழர்கள் சட்டத்திற்குப் புறம்பாகத் தடுத்து

வைக்கப்பட்டிருப்பதும் இலங்கைத்தீவின் மறுபகுதியில் வாழும் தமிழர்கள் மீது செலுத்தப்படும் வன்முறையும் அவர்களது முற்றான பௌதீக இருப்பினை இல்லாமற் செய்யும் இலக்கினைக் கொண்டதாகவும் இனஅழிப்பு தொடர்பான ஐ.நா.பிரகடனத்தின் விதிமுறை II (c) இனை பெருமளவு மீறுவதாகவும் உள்ளது. இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் உயிர் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது மட்டுமல்லாமல் அவர்களது நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை எடுத்துரைப்பதற்கான அரசியல் வெளியும் அழிந்து போயுள்ளது. மக்களின் குரலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் உயிராபத்தின் விளிம்பில் வாழ்கின்றனர். 2005 இல் ஜனாதிபதி இராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் 4 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இவை தவிர இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே முன்னெடுக்கப்பட்ட திட்டமிட்ட நில ஆக்கிரமிப்பு, தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைச் சிங்கள பௌத்த மக்களின் அரசியல் மேலாதிக்கத்திற்கு ஏதுவாக மாற்றியமைத்தல் போன்ற செயற்பாடுகளும், புதிய வாக்காளர்களைப் பதிய மறுத்தமை, மற்றும் தொடர்ந்து போரினாலும் இராணுவ செயற்பாடுகளினாலும் பாரிய அளவில் ஏற்படுத்தப்பட்ட இடப்பெயர்வுகள் ஆகியனவும் பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை எண்ணிக்கையில் குறுகச் செய்துள்ளது. இவை அனைத்துமே இலங்கைத் தீவின் பிரதான அரசியல் நீரோட்டத்தில் தமிழர்கள் பங்கு பெறுவதை சாத்தியமற்றதாக்கியுள்ளது.

மேலே விபரிக்கப்பட்ட நிலமை சிறிலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரிந்து வரும் கொடுங்கோன்மையினை நன்கு தெளிவாக்குகிறது. அத்தோடு அவர்கள் தம்மை அழிவிலிருந்து பாதுகாத்து அதன் மூலம் தமது சொந்தத் தாயகத்தில் தனித்துவமான மக்களாக பாதுகாப்புடன் வாழ்வதற்கு தமது தன்னாட்சி உரிமையினை நிறுவவும் தமது இறைமையைப் பிரயோகிக்கவும் வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நிற்கிறது. இவ்வாறான சூழ்நியையில் பாதிக்கப்பட்ட மக்கள் பிரிந்து போகும் தெரிவு உட்பட்ட தன்னாட்சி உரிமையிமையினைப் பெறுகிறார்கள் என்பதை அனைத்துலக சட்டங்கள் எல்லாமே அங்கீகரிக்கின்றன.

சிறிலங்காவில் தமிழ் மக்களுக்கு அரசியல் வெளி எதுவும் இல்லை என்பதை பேச்சுச் சுதந்திரத்துக்கு எதிரான வகையில் தனிநாடு பற்றிப் பேசுவதையே தடை செய்யும் 1983 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 6வது திருத்தச் சட்டம் குறித்து நிற்கிறது. அனைத்துலக சட்டவாளர் ஆணையத்தினால் மேம்பட்ட நாடு எவற்றிலும் காணப்படத் தகாத அழுக்கு நிறைந்த கறை என விபரிக்கப்பட்ட 1979 ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்களின் பாதுகாப்பற்ற தன்மையின் முழுமையான வெளிப்பாடாக இன்றும் விளங்குகிறது.

அது போலவே சிறிலங்காவின் அவசரகாலச்சட்டங்கள் நீண்ட காலமாகவே பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் வலிந்த காணாமற் போதல்கள், கொலைகள், சித்திரவதை, பாலியல் வல்லுறவு என்பவற்றிற்கு இடமளித்து வந்துள்ளன. இவ்வாறான பாதுகாப்பற்ற சூழ்நிலையில் தமிழர்கள் தமது அரசியல் அபிலாசைகளை முழுமையாக

வெளிப்படுத்துவதற்கு சிறிலங்காவின் அரசியலமைப்பு எவ்வித வெளியையும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அர்த்தமுள்ள வகையில் அரசியலில் பங்குபற்றுவதற்கு இடமெதுவுமற்ற இந் நிலையும் தமிழரது தேசிய முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கு அனைத்துலகப் பொறிமுறை எதுவும் அற்றிருந்த நிலையும்தான் தமிழரது உரிமைக்கான அறவழிப்போராட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையின் கீழ் ஓர் ஆயுதப் போராட்டமாக வளர்ச்சியடைவதற்கு காரணமாகியது. விடுதலைப் புலிகள் அமைப்பின் இராணுவ பலமும் அதன் வழி வந்த நடைமுறை அரசும் தமிழர்கள் தன்னாட்சி உரிமையினை நோக்கிய அரசியல் விருப்புக்களை இலகுவாக வெளிப்படுத்துவதற்கான அரசியல் வெளியை வகுத்துக் கொடுத்தன. இன்று அத்தகைய அரசியல் வெளி எதுவும் இல்லை. இந் நிலையில் இலங்கைத் தீவுக்கு வெளியேயிருந்துதான் தாயகத்தில் தமிழரது அரசியல் மற்றும் வாழ்வுரிமைகளினை நிலை நிறுத்துவதற்கான அர்த்தமுள்ள அரசியல் முன்னெடுப்பு எதனையும் தொடர முடியும்.

## 2. நியாயப்பாடு

ஈழத் தமிழர்களின் சமூக இருப்பு என்பது அவர்களின் அரசியல், பண்பாடு, பொருளாதாரம், வாழ்வியல் ஆகியவற்றின் தனித்துவத்தினை தக்க வைப்பதிலும் உலகின் ஏனைய சமூகங்களுடன் இணைந்தும் இணையாகவும் செழுமைப்படுத்தப்படுவதிலுமேயே தங்கியுள்ளது. இதனைச் சிறப்பாக அடைவதற்கும் அச்சுறுத்தல்களினை ஏற்படுத்தக்கூடிய காரணிகளினைக் கட்டுப்படுத்தி வெற்றி கொள்வதற்கும் ஏதுவாக ஒரு உறுதியானதும் தன்னாட்சி உரிமையினைக் கொண்டதுமான அரசியல் கட்டமைப்பு அவசியமாகவுள்ளது. இதுவே 1976 இல் வட்டுக்கோட்டை தீர்மானமாக வடிவம் பெற்று 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் மக்கள் ஆணையாக உறுதிப்படுத்தப்பட்டது.

இலங்கைத் தீவினுள் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக வளர்த்தெடுக்கப்பட்டு இன்றைய நிலையில் கூர்மையடைந்துள்ள இராணுவமயப்படுத்தப்பட்ட அரசியற்கட்டமைப்பும், பௌத்த சிங்கள மேலாதிக்க சமூகத்தினை சார்ந்த அரசியலமைப்பும் அதனடிப்படையான சட்டங்களும் ஏனைய தேசிய இனங்களின் அடிப்படை உரிமைகளினையும் நல்வாழ்வினையும் மறுத்துள்ளன. இவை தமிழ் மக்களினதும் பௌத்த சிங்களவரல்லாத ஏனைய இனங்களினதும் அரசியல் தனித்துவத்திற்கும் சமூக இருப்புக்கும் சுதந்திரமான பண்பாட்டு வளர்ச்சிக்கும் மிகப்பெரும் தடைகளாக விளங்குகின்றன.

இவை மட்டுமன்றி ஏற்கனவே நாம் மேற் குறிப்பிட்டவாறு, தமிழ்மக்கள் தங்கள் அரசியல் வேட்கையினை சுதந்திரமாக தெரிவிப்பதற்கும் அதற்காக குரலெழுப்பிப் போராடுவதற்கும் இலங்கைத் தீவின் உள்ளக நிலைமைகள் மிகப் பெரும் தடையாகவும் அச்சுறுத்தலாகவும் உள்ளன. இத்தகைய சூழலில் இவற்றினையெல்லாம் எதிர்கொண்டு தமிழ்மக்களின் அரசியல் தன்னாட்சி உரிமையினை வென்றெடுப்பதற்கு வேண்டிய பணிகளினை பல்வேறுபட்ட அணுகுமுறைகளூடாக முன்னெடுக்க வேண்டிய பாரிய கடமை இலங்கைத்

தீவிலிருந்து வெளியேறி வாழுகின்ற புலம் பெயர் தமிழ் மக்களின் கைகளில் வீழ்ந்துள்ளது. அத்தோடு தமிழர்கள் தமது இறைமையை நிலை நிறுத்தும் போராட்டத்தினை முன்னெடுக்கும் பணியில் புலம் பெயர் தமிழ் சமூகத்தினரும் குறிப்பாக இரண்டாம் தலைமுறையினரும் பெரும் பங்கு வகிக்க வேண்டும் எனத் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் 2008 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார். புலம் பெயர் தமிழர்கள் பெரும்பாலும் தாராளவாத மக்களாட்சியின் இடையே வாழ்கின்றனர். தாம் வாழும் நாடுகளின் விதிமுறைகளுக்கேற்ற வகையில் தமிழீழ இலட்சியத்தை ஜனநாயக அமைதிவழிகளால் முன்னெடுக்கலாம் என்பதில் பற்றுறுதி கொண்டிருக்கிறார்கள். அதனை முன்னெடுப்பதற்கான ஒருங்கிணைக்கப்பட்டதும் மக்களின் ஆணையினைப் பெற்றதுமான ஒரு கட்டமைப்பின் அவசியம் இன்று உணரப்பட்டுள்ளது. அதுவே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என தற்போது முன்மொழியப்பட்டுள்ளது. இது தொடர்பாக பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களிடையேயும் இப் பணிக்கென நியமிக்கப்பட்ட மதியுரைக்குழுவினரிடையேயும் நடந்தேறிய கருத்துப்பரிமாற்றங்களின் வெளிப்பாடே இவ் அறிக்கையாகும்.

## 3. அரசியற் கோட்பாடு

ஈழத் தமிழரின் புலப்பெயர்வும் புலம்பெயர்வும் அவர்களுக்கு நாடு கடந்த வாழ்க்கையை உருவாக்கியிருக்கிறது. மரபார்ந்த நாடு-தேசியம் போன்ற எல்லைகளைக் கடந்து 'நாடு கடந்த தேசியம்' என்ற புதிய நிலையை அவர்கள் எட்டியுள்ளனர். நாடு கடந்த தேசியம் என்பது தமிழ் மக்களையும் அவர்களது பல்வேறு சமூக, பொருளியல், அரசியல் நிறுவனங்களையும் அவர்கள் வாழுகின்ற நாடுகளின் புவியியல் எல்லைகளைத் தாண்டி இணைக்கும் வழிமுறையாகும்.

உலகமயமாக்கல் நடைமுறையின் ஒரு விளைவான நாடு கடந்த தேசியம் என்பது உலகமயமாக்கலின் சந்தைகளினை ஒருங்கிணைக்கும் செயற்பாட்டுக்கும் அப்பாற் சென்று அரசியல் மற்றும் சமூக இயக்கங்களினை உலகந் தழுவிய நிலையில் ஒருங்கிணைக்கும் செயன்முறையாக உருவாக்கம் பெற்றுள்ளது. சுற்றுச்சூழற் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றினை ஒத்த விடயங்களுக்கான இயக்கங்களினை உலகம் பரந்ததாக முன்னெடுக்கும் அரசசார்பற்ற அமைப்புக்கள் தங்களது செயற்பாடுகளினூடாக சர்வதேச அரசியற்தளத்தில் குறிப்படத்தக்களவு செல்வாக்கினை நிலைநிறுத்தியுள்ளன. இச் செயன்முறையானது, அடக்குமுறைகளின் காரணமாக தாயகங்களினை விட்டு ஏதிலிகளாக இடம்பெயர்க்கப்பட்டு சிதறிவாழும் இனங்கள் தம்மை ஒருங்கிணைக்கவும், நாடுகள் கடந்த நிலையில் உருவாக்கப்படும் இயக்கங்களினூடாக பொருத்தமான அழுத்தங்களினை உருவாக்கி தங்களது தாயகம் நோக்கிய அரசியல் மற்றும் ஏனைய குறிக்கோள்களினை அடைந்து கொள்ளவும் சிறப்பாக வழிசெய்கின்றது.

இந்த நூற்றாண்டின் அரசியலில் நாடு கடந்த தேசியமும் நாடுகளின் எல்லைகள் கடந்த நிலையில் தொழிற்பட்டு வருகிற அரசியல் பொருளாதார உறவுகளும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. நாடு கடந்த அரசியலும் நாடு கடந்த தேசியமும் ஈழத்

தமிழர்களுக்கும் அவர்களது தாயகத்தின் விடுதலைக்கான வேட்கைக்கும் பன்முகப்பட்ட புதிய வாய்ப்புக்களை வழங்குகின்றன. நமது நாடு கடந்த வாழ்க்கையின் தர்க்கரீதியான தொடர்ச்சியே நாடு கடந்த அரசியலாகும்.

## 3.1 நாடு கடந்த தேசியமும் புலம் பெயர் தமிழ் மக்களும்

புலம்பெயர்ந்த – புலம்பெயர்க்கப்பட்ட தமிழ் மக்கள் தாம் வாழும் நாடுகளிலுள்ள தமிழ் மக்களோடும் தமது தாயகத்திலுள்ள மக்களோடும் நெருக்கமான உறவுகளைப் பேணி வருகிறார்கள். அவர்களுடைய வாழ்வு அவர்கள் வாழும் நாடுகளின் தேசிய மற்றும் புவியியல் எல்லைகளுக்குள் மட்டுமே குறுகி விடுவதில்லை. இவர்கள் நாடு கடந்த சமூகமாக, பல்வேறு நாடுகளிலும் ஒரே நேரத்தில் வாழ்க்கை, உறவுமுறைகள், பொருளியல் தொடர்புகள், அரசியல் இணைப்புக்கள் என்பவற்றைப் பேணுபவர்களாக மாறி விட்டனர். தாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் அரசியல், சட்ட திட்டங்களுக்கு அமைவாக வாழ்ந்தாலும் நாடு கடந்த நிலை அவர்களுக்கு புதிய அரசியல் சமூக வெளியை உருவாக்கியுள்ளது. ஈழத்தமிழர்களின் அரசியல் சமூக நலன்களுக்கு உயிரூட்டம் தருவது இந்த நாடு கடந்த அரசியல் வெளியாகும்.

அதேவேளை, ஈழத்தில் வாழும் மக்களும் இந்த நாடு கடந்த வெளியுடன் பின்னிப் பிணைந்துள்ளனர். புலம் பெயர்ந்த தமிழ் மக்களும் களத்தில் உள்ள தமிழ் மக்களும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகவே உள்ளனர். இக் காலகட்டத்தின் தமிழ்த் தேசியம் என்பது பன்முகப்பாட்டையும் பன்முக அடையாளங்களையும் வரவேற்பது. ஜனநாயகப் பண்பு வாய்ந்தது.

புலம் பெயர் ஈழத் தமிழர்களிடையேயான ஒருங்கிணைவு என்பது அறியப்பட்டவிடயமே. இலங்கைத் தீவினுள் தொடர்ச்சியாக தமிழர்கள் மீது நிகழ்த்தப்படும் அடக்குமுறையினை எதிர்கொள்வதற்கும், தனது அடக்குமுறைச் செயற்பாடுகளினை நியாயப்படுத்துவதற்காக சிறீலங்கா அரசு அனைத்துலக மட்டத்தில் முன்னெடுக்கும் பரப்புரைப்போரினை முறியடிப்பதற்கும் புலம் பெயர் தமிழர்கள் தமக்குள் ஒன்றிணைவதும் சமூகமட்ட ஒன்றிணைவுகளுக்கும் அப்பால் சென்று பலதளங்களிலும் பல்வேறு புலம்பெயர் சமூகங்களுடன் அரசியல்ரீதியான ஒருங்கிணைப்பினைக் கட்டியெழுப்புவதும் மிக அவசியமாகவுள்ளது.

## 3.2 நாடு கடந்த அரசியல்

நாடு கடந்த அரசியல் எனப் பொதுவாகப் பேசப்படும் போது அது உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டங்கள், பெண்ணியம் - பெண்விடுதலை இயக்கப் போராட்டங்கள், மனித உரிமைகளுக்கான போராட்டங்கள், சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான போராட்டங்கள் போன்றவற்றையே இதுவரை காலமும் குறித்து நின்றது. இத்தகைய போராட்டங்கள் நாடு கடந்த நிலையிலும் தாக்கமானதாக இடம் பெற்று வருகின்றன. ஒரு சில தேசிய விடுதலைப்போராட்டங்களுக்கு ஆதரவாக நாடு கடந்த இயக்கங்களும் பணி புரிந்து வந்துள்ளன. இத்தகைய நாடு கடந்த அரசியலும் அவை சார்ந்த போராட்டங்களும் வழமையான ஒரு தேசம் - ஒரு அரசு அல்லது ‘சர்வதேச உறவுகள்’ என்கிற நெறிமுறைக்குள் அடங்காதவை. அடக்கப்பட முடியாதவை. அங்கீகரிக்கப்பட்ட

நாடுகள் அல்லது தேசிய அரசுகள் (Nation – States) சர்வதேச உறவுகளுக்கும் சர்வதேச நிறுவன ஒழுங்கு முறைகளுக்கும் அடிப்படையாக உள்ளன. எனினும் நாடு கடந்த அரசியல் இவற்றிற்கு அப்பால் தொழிற்படுவதால் இது புதிய ஒழுங்கு முறைகளையும் புதிய நிறுவன அமைப்புக்களையும் வேண்டி நிற்கின்றது.

21 ஆம் நூற்றாண்டின் அரசியல் நாடு கடந்த அரசியலாகும். கடந்த காலங்களில் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு புலம் பெயர்ந்த – புலம் பெயர்க்கப்பட்ட மக்கள் பெரும் பங்களிப்பை நல்கியுள்ளனர். ஐரிஸ் மக்கள், யூதமக்கள் ஆகியோர் இவற்றிற்கு நல்ல எடுத்துக்காட்டுக்களாகும். புலம் பெயர்ந்த யூத மக்கள் இன்றுவரை இஸ்ரேலுக்கு மிகுந்த உறுதுணையாக உள்ளனர். இத்தாலி, கெயிட்டி, குரோஷியா, எரித்திரியா, எல்சல்வடோர் போன்ற நாடுகளின் அரசியலில் புலம் பெயர்ந்த மக்கள் பிரிக்க முடியாத அங்கமாக உள்ளனர். புலம் பெயர்ந்த கெயிட்டி மக்களுக்கெனத் தனியான தேர்தல் தொகுதியொன்று உண்டு. இஸ்ரேலிய தேர்தல்களில் வாக்களிக்க புலம் பெயர்ந்த மக்கள் ஆயிரக்கணக்கில் திருப்பிப் போவது என்பது வழமையான ஒன்று. 1990 இல் குரோஷியாவில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பேன்ஜோ துஜ்மான் புலம் பெயர்ந்த குரோஷிய மக்களின் நிதி உதவியுடன் வெற்றி பெற்ற பிற்பாடு புலம் பெயர்ந்த மக்களுக்காக 12 ஆசனங்கள் ஒதுக்கியிருந்தார். இந்தியாவின் பொருளாதார மேம்பாட்டில் புலம் பெயர்ந்த இந்தியர்கள் பெருமளவு பங்களித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த 30 ஆண்டுகளாக புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் விடுதலைப்போராட்டத்திற்குப் பேராதரவு வழங்கியது மட்டுமன்றி போரால் அவதியுற்று வந்த இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கைக்கும் உறுதுணையாக இருந்து வந்துள்ளனர். இந்த நூற்றாண்டில் நாடு கடந்த அரசியல் பெறுகிற முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்கு இவை ஒரு சில எடுத்துக்காட்டுக்கள் மட்டுமே. இந்தப் பின்னணியில்தான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு திருப்பு முனையாக அமையப் போகிறது.

### 3.3 நாடு கடந்த அரசாங்கம் - நாடு கடந்த அரசாட்சி

நாடு கடந்த அரசாட்சி என்ற எண்ணக்கரு ஆய்வாளர்கள் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. பல்வேறுபட்ட வடிவங்களில் நாடு கடந்த அரசாட்சி தொழிற்பட முடியும். ஐரோப்பிய ஒன்றியம் (EU) இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. NAFTA எனப்படும் வட அமெரிக்க கட்டற்ற வணிக உடன்பாடு இன்னொரு எடுத்துக்காட்டு.

எனினும் நாம் முன்மொழிகிற நாடு கடந்த அரசாட்சி முறைமை தனித்துவமானதும் கோட்பாட்டுரீதியாக வேறுபட்டதுமாகும். ஒரு தேசிய இனம் தனக்கென ஒரு நாடு கடந்த அரசாங்கத்தை முன்மொழிவது இதுவே முதற்தடவை. இதுவரை காணப்படும் நாடு கடந்த அரசாட்சி முறைமைகள் தேசிய அரசுகள் (Nation – States) ஒன்றிணைந்து அல்லது இணக்கப்பாடு கொண்டு உருவானவை. இங்கு குறிப்பிடப்படும் நாடு கடந்த அரசாங்கமானது விடுதலை வேண்டி போராடுகின்ற ஒரு தேசிய இனம் முன் வைக்கும் திட்டமாகும்.

நாடு கடந்த அரசாங்கம் மக்களால் உருவாக்கப்பட்டுப் பேணப்பட வேண்டியது. கூடுதலுக்கான சுதந்திரம், பேசுதலுக்கான சுதந்திரம் போன்ற ஜனநாயக அரசியல் உரிமைகளில் தங்கியிருப்பது. இது வர்த்தகம் செய்வதற்கான உரிமை, தேவைப்படுவோருக்கு மனிதாபிமான நிவாரணம் வழங்குவதற்கான உரிமை, வேறொரு நாட்டில் வாழ்பவர்களோடு குடும்ப மற்றும் சமூகப் பிணைப்புக்களை பேணுவதற்கான உரிமை என்பவற்றில் தங்கியுள்ளது. இவையெல்லாம் தாராளவாத ஜனநாயகங்கள் எல்லாவற்றிலும் காணப்படும் உரிமைகள். முன்மொழியப்படும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் செயற்படவிருக்கும் பரப்புத்தளத்தின் பன்முகத்தன்மையின் காரணமாக இந் நிறுவனம் அரசாங்கங்களைப் போலவே ஒழுங்கமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே தான் இந் நிறுவனத்தைக் குறிப்பதற்கு அரசாங்கம் என்ற சொல் பொருத்தமானது. இதன் உருவாக்கம் தமிழர் வாழும் எந் நாடுகளின் சட்டத்தையும் மீறப்போவதில்லை. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகள் எல்லாம் வன்முறை தவிர்ந்தவையாகவும் எந் நாட்டு சட்டங்களையும் மீறாத வகையிலும் மேற் கொள்ளப்படும்.

தமிழரிடையேயுள்ள அடிமட்ட நிறுவனங்கள் நாடு கடந்த அரசாங்கத்தின் தூண்களாக அமையும். தேசியம், தாயகம், தன்னாட்சி உரிமை என்பவற்றின் அடிப்படையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக சர்வதேச சமூகத்தின் ஆதரவினை வேண்டி இவ் அரசாங்கம் செயற்படும். இது அரசியல் இராசதந்திரப்பாதைகளின் ஊடாக தன் முயற்சிகளை முன்னெடுக்கும். மேலும், தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை அரசியல் மற்றும் சட்ட வழிமுறைகள் மூலமாக நிறுவுவதோடு அதற்கு பரிகாரமாக அரசியல் தீர்வுமுறையினை பெற்றுக் கொள்வதற்கும் இவ் அரசாங்கம் செயற்படும்.

## 4. உருவாக்கக்குழுவும் மதியுரைக் குழுவும்

நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் துன்பகரமானதும் உரிமைகள் மறுக்கப்பட்டதுமான வாழ்க்கைச் சூழலில், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள அக்கறையின் காரணமாக உந்தப்பட்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒன்றினை அமைக்கும் முயற்சிக்கான முன்மொழிவினை 2009 ஆண்டு யூன் மாதம் 16 ஆம் திகதி வெளியிட்ட பத்திரிகை அறிக்கை இதற்கான செயற்குழுவின் இணைப்பாளர் மற்றும் மதியுரைக்குழு உறுப்பினர்கள் பெயர் விபரங்களைக் கொண்டிருந்தது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அமைப்பது குறித்த வழிமுறைகளைக் கண்டறிவதும் அத்தகைய அரசாங்கம் ஒன்றினூடாக அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகளைப் பரிந்துரை செய்வதும் இவர்களின் பணியாக இருந்தது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் எல்லா முயற்சிகளும் செயற்பாடுகளும் சனநாயக வழிமுறையில் அமைந்திருக்கும் என்பதனை அடிப்படை நிலைப்பாடாக வரித்துக் கொண்டு பின்வருவன இத்தயை நாடு கடந்த அரசாங்கத்தின் இலக்குகளாக இருக்க முடியும் என முன்மொழியப்பட்டது.

1. 1976 இன் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டதும், 1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் ஒரு மனதாக வாக்களித்து ஆணைப்படுத்தப்பட்டதும், பின்பு 1985ல் திம்புப் பிரகடனத்தில் வெளிப்படுத்தப்பட்டதுமான தமிழர் ஓர் தேசிய இனம், வடக்கு- கிழக்கு தமிழர் தாயக நிலம், ஈழத் தமிழரின் தன்னாட்சி உரிமை போன்ற அடிப்படைக் கோட்பாடுகளை ஈழத் தமிழரின் அரசியல் அபிலாசைகளின் ஆதார சுருதியாக ஏற்றுக் கொள்ளும் அனைத்துத் தமிழ் மக்களையும் ஒன்றிணைப்பது

2. 2001, 2004 ஆம் ஆண்டுகளின் பொதுத் தேர்தல்களின் போது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழ்த் தலைமைத்துவத்தால் முன்மொழியப்பட்டு பின்னர் தமிழ் மக்களால் ஏற்று உறுதி செய்யப்பட்ட கொள்கைகளின் அடிப்படையிலான தமிழ்த் தலைமைத்துவத்துடனும், இறையாண்மையினையும் சுயநிர்ணய உரிமையினையும் மீளப் பெறும் தமிழர் தேசத்தின் அரசியல் அபிலாசைகளை ஆதரித்தும் குரல் கொடுத்து வரும் ஏனைய குழுக்களோடும் பங்குதாரராகச் செயற்படல்.

3. சிங்கள தேசத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கான தமிழர் தேசத்தின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தல்.

4. அரசுகளுடனும், பன்னாட்டு அரசுகள் சார்ந்த நிறுவனங்களுடனும் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துதல்.

5. உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழரின் சமூக, பொருண்மிய, பண்பாட்டு மேம்பாடுகளைத் துரிதப்படுத்தல்.

6. தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களுக்கிடையிலான வேறுபாடுகளை தமிழர் தன்னாட்சி உரிமைக்கெதிரான பயத்தை தோற்றுவிக்கும் கருவியாகக் கொள்ளாமல், முஸ்லீம் மக்களுடன் இணைந்து இரு சமூகத்தினரும் ஒருமித்து பங்குபெறும் அரசியல் வழிமுறைகளை இனம் காணுதல்.

7. வடக்கு- கிழக்கில் வாழும் ஈழத் தமிழர்களினதும், உலகெங்கும் வாழும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களினதும் நலன் பேணும் வகையிலான செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

இலங்கையில் தொடர்ந்து நிகழும் இனப்படுகொலையினை நிறுத்துமுகமாக பன்னாட்டு அரசு சார் நிறுவனங்களுடனும், அரச சார்பற்ற பன்னாட்டு நிறுவனங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்படுவதனையும் இக் குழு தனது பணியாகக் கொண்டிருந்தது.

இவ்வாறு தொடர்புகளைப் பேணிக் கொள்வதன் மூலம் ஈழத்தமிழரின் உயிர் இருப்பை உறுதி செய்தல் மற்றும் தமிழ் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளையும், தமிழ்ச் சிறுவர்கள் மீதான வன்முறை சித்திரவதைகளையும் சிங்கள அரசும் அதன் இராணுவமும் அதனால் நெறிப்படுத்தப்படும் சக்திகளும் மேற்கொள்ளாதபடி தடுத்து நிறுத்துதல், பிரிந்த குடும்பங்களை விரைவாக ஒன்று சேர்த்தல், வன்தடைமுகாம்களில் வதைபடும் மூன்று இலட்சம் தமிழ் மக்களையும் அவர்களின் சொந்த வீடுகள், ஊர்களில் குடியமரும்படியான வழிவகைகளை இனம் காணுதல், தமிழ் இன அழிப்பில் ஈடுபட்டவர்களையும் மனித நேயத்திற்கு எதிரான போர்க்குற்றங்களைத் திட்டமிட்டுப் புரிந்தவர்களையும் நீதி விசாரணைக்கு உள்ளாக்குதல் போன்ற விடயங்களில் உரிய நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதிலும் இக் குழு கவனம் செலுத்தி வந்தது.

பல்வேறு துறைகளில் சிறப்புத் தகமை கொண்ட பின்வரும் புலமையாளர்கள் இக் குழுவின் உறுப்பினர்களாக கடமையாற்றுகின்றனர்.

பேராசிரியர் பிரான்சிஸ் பொய்ல் (அமெரிக்கா)
பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் (கனடா)
வைத்தியக் கலாநிதி நாகலிங்கம் ஜெயலிங்கம் (அமெரிக்கா)
சட்ட அறிஞர் ஜெயப்பிரகாஸ் ஜெயலிங்கம் (அமெரிக்கா)
சட்ட அறிஞர் கரன் பார்க்கர்(அமெரிக்கா)
பேராசிரியர் பழனியப்பன் இராமசாமி (மலேசியா)
சட்ட அறிஞர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் (அமெரிக்கா)
பேராசிரியர் பீற்றர் சால்க் (சுவீடன்)
வைத்தியக் கலாநிதி சிவனேந்திரன் சீவநாயகம் (அவுஸ்திரேலியா)
பேராசிரியர் நடராசா சிறிஸ்கந்தராசா (சுவீடன்)
பேராசிரியர் முத்துக்குமாரசாமி சொர்ணராஜா (பிரித்தானியா)
கலாநிதி அமுது லூயிஸ் வசந்தகுமார் (பிரித்தானியா)

இம் மதியுரைக்குழு, 2-4 ஒகஸ்ட் 2009 இல் சூரிச்சிலும், 2-4 ஒக்டோபர் 2009 இல் ஒஸ்லோவிலும், 3-6 டிசெம்பர் 2009 இல் லண்டனிலும் 19-20 பெப்ரவரி 2010 இல் நியூயோர்க்கிலுமாக நான்கு நேரடிச் சந்திப்புக்களை மேற்கொண்டது. இச் சந்திப்புக்கள் நடைபெற்ற இடங்களில் வாழும் தமிழ் மக்களோடும் தமிழர் அமைப்புக்களோடும் மதியுரைக்குழு சந்திப்புக்களையும் மேற்கொண்டது.

### விசேட நடவடிக்கை

மதியுரைக்குழுவின் பிரதான செயலிலக்கு நேரடித் தேர்தல்கள் மூலம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்கற்கான பரிந்துரைகளை வழங்குவதாக இருப்பினும் சிறீலங்கா அரசால் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் - குறிப்பாக சிறுவர்களின் நலன் பேணும் திட்டங்களையும் தனது விசேட செயற்பாடாகக் கொண்டது. வதைமுகாம்களுக்கு நிகராகக் கருதப்படக்கூடிய முறையில் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 280,000 மேற்பட்ட மக்களின் நலன் மதியுரைக்குழுவின் விசேட கவனத்திற்குட்பட்டிருந்தது.

மதியுரைக்குழு, தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுவர்களது பெயர், வயது, பால் விபரங்கள், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாம்களின் விபரங்கள் போன்றவற்றைத் திரட்டிச் சேகரித்து ஆவணப்படுத்தியது. இவ் விபரங்கள் முகாம்களில் இச் சிறுவர்கள் நலன் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு அவர்களின் நலன் பேணப்படுவதற்கும் பட்டினி மூலமும் புறக்கணிப்பாலும் இச் சிறுவர்கள் சிறிலங்கா அரசால் துன்பப்படுத்தப்படாமல் கண்காணிக்கப்படவும் உதவும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட சிறுவர்களின் பெயர்ப்பட்டியல் ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இவ் விடயம் தொடர்பாக ஒரு அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மதியுரைக் குழுவினர் தமக்குக் கிடைத்த எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தி மூத்த இராசதந்திரிகள், அரச அலுவலர்கள், மனிதாபிமான மற்றும் உதவி வழங்கும் நிறுவன ஊழியர்கள் எனப் பலரோடு சந்திப்பினை மேற்கொண்டு வந்துள்ளார்கள். வடக்குக் கிழக்கிலுள்ள மனிதாபிமான நிலை பற்றி, குறிப்பாக வன்னியிலுள்ள இடம் பெயர்ந்த மக்களின் நிலைபற்றி விளக்கங்கள் கொடுத்ததோடு இந் நிறுவனங்கள் சிறீலங்காவுக்கு உயர்மட்டப் பயணங்கள் மேற்கொள்வதற்கு முன்னர் இவ்விடயங்களை வலியுறுத்தி வந்திருக்கிறோம். இதை விட முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் காயமுற்ற போராளிகள், மூத்த விடுதலைப்புலிகள் இயக்கத்தினரின் குடும்பத்தினர், மற்றும் இரகசியத் தடுப்பு நிலையங்களில் போதிய மருத்துவ வசதியோ பாதுகாப்போ இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறுவர்களின் நிலை பற்றி சர்வதேச சமூகத்தின் கவனத்தினைப் பெறும் வகையில் மதியுரைக்குழுவினர் சமூகச் செயற்பாட்டு நிறுவனங்களோடு தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோருடன் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பு ஏற்படுத்துவதற்கான வாய்ப்பினைப் பெறுவதற்கு மதியுரைக்குழு தன்னால் இயன்ற ஆவன செய்யும். இதன்மூலம் குடும்பத்தினர் அவர்களைப் போய்ப் பார்க்கவும் சட்டவாளர்களின் உதவிபெறவும் வசதியேற்படும். தடுத்து வைக்கப்பட்டுள்ளோரினது விடுதலைக்காக மதியுரைக்குழு தமக்குக் கிடைக்கும் எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்தும்.

இடம் பெயர்ந்த மக்களின் விரைந்த தேறுகை மற்றும் அவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வினைக் காண்பது குறித்த விடயங்களைக் கையாள்வதற்காக பல்வேறு துறைசார் நிபுணர்களைக் கொண்ட செயற்படையணி ஒன்று அமைக்கப்படவேண்டிய தேவையினை மதியுரைக்குழு அடையாளம் காண்கிறது. இடம் பெயர்ந்த மக்களுக்கான நிலையான தீர்வுகள், இடம் பெயர்ந்தோருக்கான வழிகாட்டிக்கோட்பாடுகள் என்பன போன்ற கொள்கை வழிமுறைகளை வரைவதோடு பல்நாட்டு உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகத் தலைவர்கள் போன்றோருடன் உடனடித் தேவைகள் பற்றி உரையாடல்களை நிகழ்த்துவதும் இச் செயற்படையணியின் பணியாக அமையும்.

## 4.1. உருவாக்கக்குழுவின் பணி

பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்து உருவாக்கக்குழுவுக்கு உறுப்பினர்களினைத் தெரிவு செய்வது என்பதாகவே ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தோம். எனினும், நடைமுறைச்சாத்தியம் கருதி வேறொரு முறையைப் பின்பற்ற நேர்ந்தது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான வழிமுறைகளை இனங்காணுகின்ற பொறுப்பை மதியுரைக்குழு எடுத்துக் கொண்டது. மதியுரைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான தேர்தல்களினை முன்னெடுப்பதற்காக நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்கள் அமைக்கப்பட்டன. நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்களின் பணிகளினை ஒருங்கிணைப்பதற்காக அனைத்துலக செயலகம் ஒன்றும் நிறுவப்பட்டது. நாடுகள் சார்ந்து பணிகளை ஒருங்கிணைக்க நாடுகளுக்கான பிரதிநிதிகளினையும் அனைத்துலகச்செயலகத்தில் நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது. இச் செயற்பாட்டாளர்கள் அனைவருமே நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்கும் முயற்சியில் பங்கு பெறுகிறார்கள்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்க உருவாக்கத்தில் பல்வேறு நாடுகளிலும் இடம் பெறும் பல்வேறு செயற்பாடுகளினையும் ஒன்றிணைக்கின்ற பணியினை தற்போது இணைப்பாளர் ஆற்றுகின்றார். இத்தகைய செயற்பாடுகளும் இணைப்பாளரின் பணியும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது அமர்வு இடம் பெற்று அரசாங்கத்திற்கான இடைக்கால நிறைவேற்றுக்குழு அமைக்கப்பட்டவுடன் நிறைவடையும்.

## 5. நாடு கடந்த அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான செயன்முறை

இப் பிரிவின் கீழ் நாடு கடந்த அரசாங்கத்தினை உருவாக்குவதற்கு அடிப்படையான கோட்பாட்டுக் காரணிகள், அடையப்பட வேண்டிய இலக்குகள் ஆகிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இங்கு முன்மொழியப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயரில் குறிக்கப்பட்டுள்ள 'Provisional' என்கின்ற ஆங்கிலப்பதம் தற்போதைய நிலைமைக்கு பொருத்தமானதாகவும் எதிர்காலத்தில் எழக்கூடிய மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் ஈடு கொடுக்கும் வகையில் பொருத்தமான கட்டமைப்பு மாற்றங்களுக்கு தன்னை உட்படுத்தப்படக்கூடியது என்கின்ற கருத்தின் அடிப்படையினையே கொண்டுள்ளது.

''நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்'' என்னும் விடயம் உறுதியான கருத்தியல் தளத்தில் முன்மொழியப்பட்டிருந்தாலும் அதனைச் செயற்படுத்துகின்ற போது ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழுகின்ற நாடுகளின் சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் முரண்படாததன்மையினை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென மதியுரைக்குழு வலியுறுத்துகின்றது. பல்வேறு புலம் பெயர் நாடுகளின் தனித்துவமான சட்டங்களுக்கும் அரசியல் விழுமியங்களுக்கும் ஊடாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாட்டினை முன்னெடுப்பதும் அதன் இலக்குகளினை அடைவதும் பாரிய சவாலுக்குரியவை என கருதும் மதியுரைக்குழு இலக்குகளினை அடைவதற்காக கொடுக்கப்படவேண்டிய முன்னுரிமையினையும் அவசியத்தினையும் கருத்திற் கொண்டு, அபிலாசைகளினைப் பிரமாண்டப்படுத்தும் வார்த்தைகளினை மிகக்கூடிய

அவதானத்துடன் பயன்படுத்துமாறு வலியுறுத்துகின்றது.

முன்மொழியப்பட்ட "நாடுகடந்த அரசாங்கம்" (Transnational Government) என்கின்ற நிறுவனம் "புகலிட அரசாங்கம்" (Government in Exile) என்ற கட்டமைப்பிலிருந்து முற்றாக வேறுபட்டது. இப் புகலிட அரசாங்கம் எனப்படுவது முன்பு தனது நாட்டினுள் இயங்கிக் கொண்டிருந்த நிலையில் அக புறக்காரணிகளின் அச்சுறுத்தல் காரணமாக தனது நாட்டிலிருந்து தற்காலிகமாக வெளியேறி வேறோர் நட்பு தேசத்தின் எல்லைக்குள் அவர்களின் அங்கீகாரத்துடனும் ஆதரவுடனும் தனது ஆட்சியினை தொடர்ந்து செயற்படுத்தும் கட்டமைப்பாகும். இரண்டாம் உலகப் போரின் போது சார்ள்ஸ் டீ கோலினால் இலண்டனில் செயற்படுத்தப்பட்ட அரசாங்கத்தினை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். நாடு கடந்த அரசாங்கம் என்பது தற்கால அரசியல் நடைமுறையில் போதிய முன்னுதாரணங்களற்றதும் புத்தாக்கமானதுமான கருத்தியலாகும். நாடு கடந்த அரசாங்கத்தினை செயற்படுத்துவதற்கு எந்தவொரு தேசத்தினதும் அங்கீகாரமோ அனுமதியோ முன்னிபந்தனையாக அமையாது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயலகம் ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து அதிகளவில் செறிந்து வாழும் நாடுகளொன்றில் அந் நாட்டு சட்ட திட்டங்களுக்கிணங்க அமைக்கப்படும்.

## 5.1. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக் கட்டமைப்பும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையும்

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான அங்கத்தவர்களினை பல்வேறு தேசங்களிலும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியிலிருந்து நேரடியாகத் தெரிவு செய்வதற்கான தேர்தல்களினை நடாத்துதல், முன்மொழியப்பட்ட நாடு கடந்த அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான முதலாவது செயற்பாடாக இருக்கும்.

சனநாயக ஆட்சிப்படுத்தலில் பொதுமக்களின் பங்குபற்றலுக்கான உரிமை சர்வதேச சட்டங்களினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஐ.நா. வின் மனித உரிமைகளுக்கான குழு மக்கள் தங்களுக்கான அரசியலமைப்பினை உருவாக்குவதில் கொண்டுள்ள பங்குபற்றல் உரிமையினை அங்கீகரிக்கின்றது. ஒருவகையில் அரசியலமைப்பினை தயாரிக்கும் குழுவினை குடிமக்களின் பங்கேற்றலூடாகத் தெரிவுசெய்தல் சிறப்பான விடயமாக கொள்ளப்படும். பொதுமக்கள் பரந்தளவில் பங்கேற்கும் தேர்தல் முறைமை மக்களின் பரந்தளவான பிரதிநிதித்துவத்தினை சான்றுப்படுத்துகின்றது.

பங்கேற்றல் நடைமுறை இன்றைய காலகட்டத்தில் அவசியமானதும் உரிமை சார்ந்ததுமான விடயமாக மாறியுள்ளது. "உரிமை" என்பதன் முக்கியத்துவம் சர்வதேச பிரகடனங்களாலும் மகாநாடுகளினாலும் தேசங்களின் அரசியலமைப்புக்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உன்னதமான சட்டமுறை ஆட்சியியலுக்கு ஆழமான ஈடுபாட்டுடன் கூடிய சனநாயகப் பயிற்சி பிரதான கிளையாக அமைந்துள்ளது. அரசியலமைப்பினை உருவாக்குவதில் பங்கேற்பதும் உரிமைகொள்வதும் விரிவடையக் கூடிய நகரும் விசையினை உருவாக்குவதனை ஒத்த பயிற்சியாகும்.

வரைவிலக்கணப்படுத்துதலிலும் நிறைவேற்றுவதிலுமுள்ள சவால்களினை எதிர்கொள்வதற்கும் அப்பால் சனநாயக பங்கேற்றலினூடாக அரசியலமைப்பினை உருவாக்குதல் என்பது பலமும், ஏற்புடமையும் சட்டமுறையான அங்கீகாரமும் கொண்ட இறுதி விளைவினைப் பெற்றுக் கொள்வதற்கான இன்றியமையாத காரணியாகும் என ஆபிரிக்க அவதானிப்பாளர் ஜீலியஸ் ஐவன்பேர் குறிப்பிடுகின்றார்.

பல்வேறு தேசங்களிலும் சிதறி வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பேரவைக்கான தேர்தல்களினை நடத்துவது தொடர்பாகவும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையினை நிர்ணயிப்பதிலும் உள்ள சிக்கல்களினை புரிந்து கொள்வதிலும் உச்சபட்சமான சிறப்பான தெரிவுகளினை அடையாளங்காண்பதிலும் மதியுரைக்குழு கூடியளவு சக்தியினையும் காலத்தினையும் பயன்படுத்தியது. பல்வேறு தேசங்களிலிருந்தும் பெறப்படக்கூடியதாகவிருந்த மக்கட்தொகைப் புள்ளிவிபரங்கள், அவர்கள் வாழும் நாடுகள், பிராந்தியங்கள் சார்ந்த பரம்பல் ஆகியவற்றினை கருத்திற் கொண்டு ஆழமாக பரிசீலனை செய்தபின் மதியுரைக்குழு கீழ்வரும் பரிந்துரைகளினைச் செய்துள்ளது.

- நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாவது அரசவை 135 அங்கத்தவர்களினைக் கொண்டிருக்கும்.

- இவர்களில் முதற் பிரதான தொகுதியினரான 115 பிரதிநிதிகள் மக்களால் தேர்வு செய்யப்படுவர். இவர்கள் பல்வேறு நாடுகளிலும் குறித்துரைக்கப்பட்ட இடங்களில் நடாத்தப்படும் தேர்தல்களினூடாக நேரடியாக தெரிவு செய்யப்படவேண்டும்.

- இரண்டாவது தொகுதியினரான 20 பேராளர்கள், மிகக் குறைந்த எண்ணிக்கை காரணமாகவோ அல்லது ஏற்பாடுகளைச் செய்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகவோ முதற் கட்டத்தில் தேர்தல்களினை நடாத்துவதற்கு வாய்ப்பு குறைந்த நாடுகளின் அல்லது பிராந்தியங்களின் மக்களினை பிரதிநிதித்துவம் செய்பவர்கள்.

- முதல் சுற்றுத் தேர்தல்கள் நிறைவடைந்த பின்னர் தெரிவு செய்யப்பட்ட அரசவைப் பிரதிநிதிகளால் இரண்டாம் தொகுதி பேராளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

- இரண்டாம் தொகுதி பேராளர்களைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை பின்வருமாறு அமையலாம். தெரிவு செய்யப்பட்ட அரசவையினர் இரண்டாம் தொகுதி பேராளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியுள்ள நாடுகளில் இருந்து ஆர்வமுடையோரிடம் விருப்புக் கடிதங்களைக் கோரி, இவ்வாறு விருப்புத் தெரிவித்தவர்கள் மத்தியில் இருந்து உரியவர்களைத் தெரிந்தெடுக்கலாம்.

- பேராளர்களினை தெரிவு செய்யும் முறைமையானது இந்தியா மற்றும் ஏனைய தேசங்களிலிருந்து ஈழத்தமிழரல்லாத தமிழர்கள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையில் பங்கு பற்றிக் குரல் கொடுக்க வாய்ப்பளிக்கிறது.

- இளையோரும் பெண்களும் அரசாங்கத்தின் உறுப்பினர்களாகப் பெருமளவில் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் ஒவ்வொரு நாடுவாரியான செயற்பாட்டுக் குழுவும் தேர்தல் பணிகளை வடிவமைக்கும் போதும், தேர்தலில் போட்டியிடுவோரைச் சேர்த்துக் கொள்ளும் போதும் இவ்விடயம் தொடர்பாக சிறப்பாக அவதானம் செலுத்த வேண்டுமெனவும் பரிந்துரைக்கப்படுகிறது.

- நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான முதற்கட்ட தேர்தல்களை 2010ம் ஆண்டு மே மாதம் 15 ஆம் திகதிக்குள் நடாத்தி முடிப்பதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

- நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதலாம் அரசவையின் செயற்படுகாலம் மூன்று வருடங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டுமெனப் பரிந்துரைக்கப்படுகிறது. அதைத் தெடர்ந்து வரும் அரசவைகளின் ஆயுட்காலமும் அவற்றிற்கான தேர்தல் முறைகளும் அரசியல் அமைப்புசபையால் வரையப்படும் யாப்பின் வழி நிர்ணயிக்கப்படும்.

நாடுகளுக்கிடையில் பிரதிநிதிகளின் எண்ணிக்கையினை பகிர்வு செய்தலின் போது மதியுரைக்குழு கையாண்ட மிகமுக்கிய கோட்பாடு நியாயநிலை பேணுதலாகும். கிடைக்கப் பெற்ற தரவுகளின்படி அறியப்பட்ட வாக்காளர் பரம்பலினை நாடுகளின் அடிப்படையில் கணிப்பிட்டு அதனூடே அதி உயர்ந்த விகிதாசாரநிலைக்கு இசைவாக பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நியாயநிலை பேணுதல் என்ற இக் கோட்பாடுதான் பகிர்வு செய்தல் அல்லது ஒதுக்கீடு செய்தல் என்ற கருத்துக்கு அடித்தளமாக அமைகிறது. ஒதுக்கீடு செய்தல் என்பது பல நாடுகள் அல்லது பிராந்தியங்களுக்கிடையில் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அந் நாடுகளின் அல்லது பிராந்தியங்களின் அளவுப்பரிமாணத்துக்கமையப் பகிர்தலாகும். டானியல் வெப்ஸ்ரரின் கருத்துப்படி பிரதிநிதித்துவத்தினை பங்கிடும்போது சரியான அளவீடுகளினைப் பயன்படுத்தி பொருத்தமான விகிதாசாரத்தில் சகலருக்கும் சேரக்கூடியதான நியமத்தினை ஏற்படுத்த வேண்டும். இக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் அரசியலமைப்பு பிரதிநிதிகளின் பரம்பலினை மக்கள் தொகை அடிப்படையில் நிர்ணயித்துள்ளது. எனினும் நியாயப்படுத்த முடியாத அளவு பெரிய பிரதிநிதிகள் சபையினை உண்டாக்க முடிந்தாலே தவிர மற்றைய சந்தர்ப்பங்களில் இறுக்கமான விகிதாசாரப் பிரதிநிதித்துவ ஒதுக்கீடென்பது சாத்தியமற்றது. ஒவ்வொரு நாட்டுக்கும் ஏதோ ஒரு வகையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இங்கேயும் அடையாளங் காணப்பட்ட நாடுகளில் வாழும் புலம் பெயர் மக்களின் தொகையையும் கருத்தில் கொண்டு, ஆகக் குறைந்த சனத்தொகையினைக் கொண்ட நாடுகளுக்கும் குறைந்த பட்ச அடிப்படைப் பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் விகிதாசாரப்படியிலான ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு இடம் பெறும் தேர்தல்களில் தெரிவு செய்யப்படும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் பரம்பலும் கீழே தரப்படுகின்றன. அடுத்து வரப் போகும் காலங்களிலான அரசாங்கத்தின் வடிவம், பிரதிநிதிகளின் எண்ணிக்கை, பரம்பல் ஆகியன அரசியல் அமைப்புசபையால் வரையப்படும் யாப்பின் வழி நிர்ணயிக்கப்படும்.

**நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் பரம்பலும்.**

| நாடு அல்லது பிராந்தியம் | தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் | பேராளர்கள் |
|---|---|---|
| கனடா | 25 | |
| பிரித்தானியா | 20 | |
| பிரான்ஸ் | 10 | |
| சுவிற்சலாந்து | 10 | |
| ஜேர்மனி | 10 | |
| அமெரிக்கா | 10 | |
| ஆஸ்திரேலியா | 10 | |
| நோர்வே | 3 | |
| டென்மார்க் | 3 | |
| இத்தாலி | 3 | |
| தென்ஆபிரிக்கா | 3 | 2 |
| நெதர்லாந்து, பெல்ஜியம், லக்ஸம்பேர்க் | 3 | |
| நியூசிலாந்து | 2 | |
| சுவீடன் | 1 | |
| பின்லாந்து | 1 | |
| அயர்லாந்து | 1 | |
| சிங்கப்பூர் | | 2 |

| | | |
|---|---|---|
| மலேசியா | | 3 |
| மத்திய கிழக்கு | | 2 |
| மொறீசியஸ் | | 1 |
| ஏனைய ஆசிய கண்டநாடுகள் | | 1 |
| ஏனைய ஐரோப்பா கண்ட நாடுகள் | | 1 |
| பசிபிக் தீவுகள் (ஓஸியானியா) | | 1 |
| கரிபீயன் பகுதியுட்பட தென்அமெரிக்கா | | 1 |
| ஏனைய ஆபிரிக்க கண்ட நாடுகள் | | 1 |
| இந்தியா | | 5 |
| முழுமையான எண்ணிக்கை | 115 | 20 |

## 5.2. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான செயன்முறையும் இலக்குகளும்

நேரடியான தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடனும் பேராளர்களின் அங்கத்துவத்துடனும் கூட்டப்படும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையின் முதன்மையான குறிக்கோள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதும் அதற்குரிய நிர்வாக கட்டமைப்பினை உருவாக்கி நெறிப்படுத்துவதாகும். மதியுரைக்குழு கீழ்வரும் பணிகளினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்குரிய ஆரம்பக்கட்ட பணிகளாக குறித்துரைத்துள்ளது.

1. தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முதன்மையானதும் உடனடியானதுமான பணி தம்மை முதற் கட்டமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியலமைப்பு சபையாக மாற்றியமைத்தலும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான யாப்பினை தயாரித்தலுமாகும்.

2. தயாரிக்கப்படும் அரசியலமைப்பு அங்கீகரிக்கப்பட்டு அமுலாக்கப்படும்வரை உள்ள காலத்திற்கு செயற்படுத்தப்படக்கூடிய இடைக்கால ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

   1. அரசாங்கத்தின் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிறைவேற்றுக்குழு அல்லது முதன்மை நிறைவேற்றுப் பணிப்பாளரைத் தெரிவு செய்தல்.

   2. இலங்கைத் தீவில் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அவசர, குறுங்கால திட்டங்களினை முன்னெடுப்பதற்காக பொருத்தமான அமைச்சுக் கட்டமைப்புக்களினையோ, சட்டவாக்க குழுக்களினையோ உருவாக்குதல்.

3. இடம் பெயர்ந்த மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்காக ஒரு செயற்படையணி அமைக்கப்படல்.

பின்வரும் விடயங்கள் அரசாங்கத்தின் கூடுதல் கவனத்திற்குரியவை என மதியுரைக்குழு கருதுகிறது.

1) இடம் பெயர்ந்து முகாம்களிலும், தடை முகாம்களிலும், வேறு அறியப்படாத இடங்களிலும் தங்கியும் தடுத்தும் வைக்கப்பட்டுள்ள மக்கள், காணாமற்போனோர், கொலையுண்டோர், சிறைப்படுத்தப்பட்டோர், துன்புறுத்தல்களுக்கும் பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தப்பட்டோர் ஆகியோரின் நிலை தொடர்பான விபரங்களினை சேகரித்தலும் ஆவணப்படுத்தலும் அவர்களுக்குரிய அத்தியாவசிய பணிகளினை ஒருங்கிணைத்தலும்.

2) ஈழத் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடமான இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் காணியும் நிலமும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களினாலும், இராணுவமயமாக்கத்தின் கீழும், அபிவிருத்தியின் பேராலும் உரிமை மாற்றம் செய்யப்படுவதிலிருந்தும் அபகரிக்கப்படுவதிலிருந்தும் பாதுகாத்தலும் அப் பிரதேசத்தின் உயிரியற்பண்பும் இயற்கைச் சூழலியலும், ஆரோக்கியமும் சிதைக்கப்படாமல் பாதுகாத்தலும்.

3) தமிழர் தாயகத்திலுள்ள இயற்கை வளங்கள், நீர்நிலைகளும் ஊற்றுக்களும், விளைநிலங்கள், மீன்பிடிமையங்கள், வனவளம், கனிமவளங்களும் படுக்கைகளும் ஆகியனவற்றினை பாதுகாத்தல்.

4) தமிழ் சிறார்களினதும் இளைஞர்களினதும் கல்வி.

5) தமிழ் மொழியினையும் பண்பாட்டினையும் அடையாளத்தினையும் பாதுகாத்து பேணுதல்.

6) தமிழின அடையாளத்தினைக் காரணமாக வைத்து தமிழ்ச் சமூகத்தின் மீதும் தனி மனிதர்கள் மீதும் நிகழ்த்தப்பட்ட இன அழிப்பு, யுத்தக்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான வன்செயல்கள் ஆகியவற்றிற்கு காரணமானவர்களினை நீதியின் முன் நிறுத்துதலும் அதனூடாக அத்தகைய கொடுமைகள் இனி ஒரு போதும் நடைபெறாமல் இருப்பதனை உறுதி செய்தலும்.

7) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சாசனங்கள், மனித உரிமைகள் பாதுகாப்பு ஆகியன தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள் பிரகடனங்கள் ஆகியவற்றினை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் அந் நியமங்களின் அடிப்படையில் தமிழ்மக்களின் பாதுகாப்பும் உரிமையும் உத்தரவாதப்படுத்துதலினை உறுதி செய்தலும்.

8) இனங்களுக்கிடையில் சுமூக உறவு நிலையை உறுதிப்படுத்தக்கூடிய மதச்சார்பற்ற ஜனநாயக அரசினை கட்டியெழுப்புவதற்கான பற்றுறுதியினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கொண்டிருத்தல்.

## 5.3. தேர்தல்களுக்கு பிற்பாடே அரசியல் யாப்பினை வரைய வேண்டும் என்பதற்கான நியாயப்பாடு

நாடுகடந்த தமிழீழ அரசவை, தேர்தல்கள் மூலம் உருவான பிற்பாடுதான் அரசியல் யாப்பினை அந்த அவை வரைய வேண்டும் என்ற ஆலோசனைக்குழுவின் முடிவு, முதற்தடவையாக அரசாங்கமொன்று உருவாகின்றபோது பின்பற்றப்படும் அனைத்துலக நடைமுறைகளுக்கு இணக்கமானதாகும். அரசியல் யாப்பினை வரையப் போகின்றவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதால் அரசியல் யாப்புக்கு ஜனநாயக அங்கீகாரம் இருக்கும்.

ஐ.நா.சபையின் அனைத்துலக மனித உரிமைப்பிரகடனத்தின் அலகு 21(3) பின்வருமாறு கூறுகின்றது: “பொதுமக்களின் விருப்பே அரச அதிகாரத்தின் அடிப்படையாகும். காலத்திற்கு காலம் இடம்பெறும் நியாயமான தேர்தல்களுக்கு ஊடாகப் பொதுமக்கள் தமது விருப்பை வெளிப்படுத்துவர். இந்தத் தேர்தல்கள் சர்வசனவாக்குரிமை, இரகசிய வாக்களிப்பு, சமத்துவமான வாக்குரிமை என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.”

அரசியல் யாப்பு இல்லாமலே தேர்தல்கள் நடாத்தப்பட முடியும் என்பதற்கும் இந்தத் தேர்தல்களின் சட்டபூர்வமான அங்கீகாரத்திற்கும் ஐ.நா.அவையின் இந்தப் பிரகடனம் தீர்க்கமான சான்றைத் தருகின்றது. ஐ.நா.அவையின் மனித உரிமைப் பிரகடனம் சர்வதேச சட்டங்களின் ஒரு அங்கமாகும்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் 1977 ஆம் ஆண்டு தேர்தல் ஆணைக்கும் இந்த அம்சமே முன்மொழியப்பட்டது. 1976 இல் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு வாக்களிக்கும்படி 1977 இல் தமிழ் மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணியின் 1977 ஆம் ஆண்டுத் தேர்தல் கொள்கை விளக்க அறிக்கை, தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களே அரசியல் யாப்பை வரைவார்கள் என்று அறிவித்திருந்தது.

## 5.4. தேர்தலினை நடத்துவதற்கான ஒழுங்கு முறைகள்

ஏற்கனவே குறிப்பிட்டவாறு ஈழத் தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையில் புலம் பெயர்ந்து வாழும் தேசங்களில் நடாத்தப்படும் தேர்தலின் மூலம் 115 பிரதிநிதிகள் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்காகத் தெரிவு செய்யப்படுவார்கள். இத் தேர்தல் செயற்பாட்டினை முன்னெடுக்கும் நோக்கத்திற்காக நாடுகள் வாரியான செயற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந் நாடுவாரியான செயற்பாட்டுக் குழுக்கள் நேரடித் தேர்தல்களை நடத்தி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை அமைப்பதற்கான பணிக்குப் பொறுப்பாக இருக்கும்.

இக் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஓர் செயலகம் அமைக்கப்படுகிறது. அவசியத்தின் அடிப்படையில் செயலகத்தின் பணிகளினை நெறிப்படுத்தி இணைப்பதற்காக பொருத்தமான எண்ணிக்கை கொண்ட ஆளணியினர் செயலகத்துடன் இணைக்கப்படுவர். செயலகம் தனது பொதுசன தொடர்பு நோக்கங்களுக்காக செய்திப்பத்திரிகை, இணையத்தளம் ஆகியவற்றினை பயன்படுத்தி தனது செயற்பாடுகள் தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் ஆகியவற்றினை பொதுமக்களுக்கு வழங்கும்.

### 5.4.1. நாடுவாரியான செயற்பாட்டுக் குழுக்கள்

2009 ஒக்ரோபர் மாதத்திலிருந்து இச் செயற்பாட்டுக்குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய இராச்சியம், கனடா, ஐக்கிய அமெரிக்கா, தென் ஆபிரிக்கா, நோர்வே ஆகிய நாடுகளுக்கான செயற்பாட்டுக்குழுக்கள் முதற் சுற்றில் அறிவிக்கப்பட்டன. பின்னர் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கான செயற்பாட்டுக்குழுக்கள் அறிவிக்கப்பட்டன. இன்னும் சில நாடுகளுக்கான குழுக்கள் விரைவில் அறிவிக்கப்படும்.

நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்கள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்கும் முனைப்புடன் உள்ளூர் தமிழ் அமைப்புக்களுடனும் தமிழ் மக்களுடனும் பரந்துபட்டவகையில் கலந்துரையாடல்களினை நிகழ்த்தி வருகின்றன. தமிழ் மக்களுடன் மட்டுமன்றி, அந்தந்த நாடுகளின் குடிசார் (சிவில்) சமூகங்களுடனும் உறவாடி, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான ஆதரவைத் திரட்டும் முயற்சியில் இக் குழுக்கள் ஈடுபடுகின்றன. அந்தந்த நாட்டு அரசியற் தலைவர்களது ஆதரவினைப் பெற்றுக் கொள்வதிலும் இவை அக்கறை கொள்ளும்.

#### 5.4.1.1. நாடுவாரியான செயற்பாட்டுக்குழுவிற்கான செயற்பாட்டு வரைமுறைகள்

1. குறிப்பிட்ட நாட்டிற்கென அமைக்கப்படும் செயற்பாட்டுக்குழு நியமிக்கப்பட்ட தனது அங்கத்தவர்களுக்கிடையில் ஒருவரினை தலைவராக அல்லது பிரதான இணைப்பாளராகத் தெரிவு செய்யும்.

2. நாடுவாரியான செயற்பாட்டுக்குழு பொருத்தமான வழிமுறைகளுடாக தங்களது நாட்டில் வாழுகின்ற புலம் பெயர் ஈழத் தமிழர்களுடன் தொடர்புகளினை உருவாக்கி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்பான கலந்துரையாடல்களினையும் விவாதங்களினையும் மேற்கொள்வதுடன் உரிய அறிவூட்டல்களினையும் வழங்கும்.

3. நாடுவாரியான செயற்பாட்டுக்குழு பொருத்தமான வழிமுறைகளினூடாக தங்களது நாட்டின் தமிழ் மற்றும் தேசிய மொழிப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றினை பயன்படுத்தி ஆக்கபூர்வமான தகவல் பரிமாற்றத்தினை உறுதிசெய்யும்.

4. நாடுவாரியான செயற்பாட்டுக்குழு தனது நாட்டின் பூகோள அமைப்பு, நிர்வாக பிரிப்புக்கள், போக்குவரத்து தொடர்புகள், ஈழத்தமிழர்களின் குடிசனப்பரம்பல் ஆகியவற்றினைக் கவனத்திற்கொண்டு ஆகக்கூடிய சாத்தியமான மையங்களில் வாக்களிப்பு நிலையங்களினை நிறுவி வாக்காளர்கள் மிகக்குறைந்த சிரமங்களுடன் வாக்களிப்பில் பங்குபற்றுவதற்கு வழிசெய்யும்.

5. நாடுவாரியான செயற்பாட்டுக்குழு தனது நாட்டிற்கென தேர்தல் ஆணையம் ஒன்றினை உருவாக்கும். இதன் பொருட்டு சிறப்பு அனுபவமும் அங்கீகாரமும் நம்பிக்கைத்தன்மையும் கொண்ட தனிநபர்களையோ அல்லது நிறுவனத்தினையோ தேர்தல் ஆணையமாகச் செயற்படுவதற்கு பணிக்கமர்த்தும்.

6. நாடுவாரியான செயற்பாட்டுக்குழு தேர்தல் கண்காணிப்பாளர் குழுவினை தெரிவு செய்யும். இக் கண்காணிப்பாளர்கள் தமிழ் சமூகத்தின் மத்தியில் இருந்தும் வேறு நன்மதிப்புப் பெற்ற நிறுவனங்களில் இருந்தும் வரும் சுயாதீனமான கண்காணிப்பாளர்களர்களாக இருக்கலாம்.

7. நாடுவாரியான செயற்பாட்டுக்குழு தனது சகல செயற்பாடுகள் தொடர்பாகவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான செயற்குழுவுக்கும், அதன் மதியுரைக்குழுவிற்கும் குறிப்பிட்ட கால ஒழுங்கில் அல்லது வேண்டப்படும் போது அறிக்கையிடும் கடப்பாட்டினை கொண்டிருப்பதோடு தனது செயற்பாட்டு வரையறைக்குள் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பாக பதிலளிக்கும் பொறுப்பினையும் கொண்டிருக்கும்.

8. நாடுவாரியான செயற்பாட்டுக்குழு தனது செயற்பாடுகளினை சிறப்பாக முன்னெடுப்பதற்காக பொருத்தமானதும் சட்டத்திற்கு உட்பட்டதுமான வழிகளில் தனக்குத் தேவையான நிதி, பொருட்கள், மனிதவளம் ஆகியவற்றினை தேடிக் கொள்ளும்.

### 5.4.2. தேர்தல் ஆணையம், தேர்தற்கண்காணிப்பு குழு - செயற்படுமுறைகள்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைப் பிரதிநிதிகளுக்கான தேர்தல்கள் நடைபெறுவதற்கென தீர்மானிக்கப்பட்டுள்ள சகல நாடுகளிலும் சுதந்திரமாக செயற்படக்கூடிய தேர்தல் ஆணையங்கள் அமைக்கப்படும். இதற்கான பொறுப்பும் அதிகாரமும் அந்தந்த நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்களுக்கே மட்டுமே உரியதாகும். அடையாளங்காணப்பட்ட சுதந்திரமான தேர்தல் கண்காணிப்பாளர்களின் நேரடி பார்வையின் கீழ் தேர்கலின் சகல செயற்பாடுகளும் கண்காணிக்கப்பட்டு தேர்தலின் முடிவில் தனியான அறிக்கையாக அவர்களினால் வெளியிடப்பட ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்.

தேர்தல் ஆணையத்தினதும் தேர்தற்கண்காணிப்பாளர்களினதும் செயற்படு இலக்குகளாக கீழ்வரும் விடயங்கள் அமையும்.

#### 5.4.2.1. தேர்தல் ஆணையத்திற்கான செயற்படு வரைமுறைகள்

1. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான நேரடித் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பத்தினை உரிய படிவங்களுடாக பெற்றுக் கொள்ளும் நிறுவனமாக செயற்படல்.

2. பெற்றுக் கொண்ட வேட்பாளர்களுக்கான விண்ணப்பங்களினை பரிசீலனை செய்தலும் அவற்றின் ஏற்புடமைத்தன்மையினை உரிய ஆதாரங்களுடன் உறுதி செய்தலும்.

3. தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான தேர்தல்களினை நடாத்துவதற்கு பொருத்தமான ஒரு நாளினை அல்லது நாட்களினை மதியுரைக்குழுவின் வழிகாட்டற் குறிப்புகளுக்கு் ஏற்பத் தீர்மானித்தல்.

4. தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்காக நடாத்தப்பட்ட தேர்தலின் வாக்குகளினை மதியுரைக்குழுவின் வழிகாட்டற்குறிப்புக்களுகேற்ப ஏற்ப எண்ணிக் கணக்கிடல்.

5. தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்காக நடாத்தப்பட்ட தேர்தலின் வாக்களிப்பு முடிவுகளினை பிரகடனப்படுத்தி வெளியிடல்.

6. தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்காக நடாத்தப்படும் தேர்தலின் நடைமுறையின் போது எழுப்பப்படக்கூடிய ஆட்சேபனைகள் குறைபாடுகள் தொடர்பில் பிணக்கு தீர்க்கும் பொறிமுறை ஒன்றினை மதியுரைக்குழுவின் வழிகாட்டற்குறிப்புகளுக்கு அமைவாக உருவாக்கி செயற்படுத்தல்.

#### 5.4.2.2. தேர்தற்கண்காணிப்பு குழுவிற்கான வரைமுறைகள்

1. தேர்தற்கண்காணிப்பாளர் குழு தங்களது கண்காணிப்புப் பணியினை மதியுரைக்குழுவின் வழிகாட்டற்குறிப்புகளுக்கு அமைவாகவும் சனநாயக தேர்தல்களினை நடாத்துவதற்கான சர்வதேச நியமங்களுக்கு இசைவாகவும் ஒழுங்கமைப்பர். அதற்கிணங்க நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான பிரதிநிதிகளினை தெரிவு செய்யும் தேர்தலினை அது நடைபெறும் தினத்திலோ அல்லது தினங்களிலோ கண்காணிப்பர்.

2. நாடு கடந்த தமிழீழ அரசாங்கப் பேரவைக்கான பிரதிநிதிகளினை தெரிவு செய்யும் தேர்தலின் வாக்குகள் தேர்தற் குழுவினரால் எண்ணிக்கையிடப்படும்போது அச்செயன்முறையினை தேர்தற்கண்காணிப்புக் குழுவினர் மதியுரைக்குழுவின் வழிகாட்டற்குறிப்புகளுக்கும், சனநாயக தேர்தல்களினை நடாத்துவதற்கான சர்வதேச நியமங்களுக்கு ஏற்பவும் கண்காணிப்பர்.

3. தேர்தலுக்கான வேட்பாளர்களினை தெரிவு செய்யும் போது எழக்கூடிய ஆட்சேபனைகள் குறைபாடுகள் ஆகியன தொடர்பில் கையாளப்படும் பிணக்கு தீர்க்கும் செயன்முறையினை மதியுரைக்குழுவின் வழிகாட்டற்குறிப்புகளுக்கு இசைவாக தேர்தற்கண்காணிப்புக்குழு கண்காணிப்புச் செய்யும்.

4. தேர்தலுக்கான வாக்காளர்களினை பதிவு செய்யும் நடைமுறையின்போது எழக்கூடிய ஆட்சேபனைகள் குறைபாடுகள் ஆகியன தொடர்பில் கையாளப்படும் பிணக்கு தீர்க்கும் செயன்முறையினை மதியுரைக்குழுவின் வழிகாட்டற்குறிப்புகளுக்கு இசைவாக தேர்தற்கண்காணிப்புக்குழு கண்காணிப்புச் செய்யும்.

5. வாக்குகள் கணக்கெடுப்பின் போது எழக்கூடிய ஆட்சேபனைகள் குறைபாடுகள் ஆகியன தொடர்பில் கையாளப்படும் பிணக்கு தீர்க்கும் செயன்முறையினை மதியுரைக்குழுவின் வழிகாட்டற்குறிப்புகளுக்கு இசைவாக தேர்தற் கண்காணிப்புக்குழு கண்காணிப்புச் செய்யும்.

6. தேர்தற் கண்காணிப்புக்குழு தனது பணிகள் யாவும் தொடர்பான விபரமான எழுத்து அறிக்கையினை குறிப்பிட்ட காலவயைறைக்குள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான செயற்குழுவுக்கும் அதன் மதியுரைஞர் குழுவிற்கும் சமர்ப்பிக்கும்.

### 5.4.3. வாக்காளர்களும் வேட்பாளர்களும்

வாக்களிப்பு உரிமை, வாக்காளர் பதிவு, வேட்பாளர்களின் தகுதிப்படுத்தலினை உறுதி செய்வது ஆகியன தொடர்பாக மதியுரைக்குழு கீழ்வரும் பரிந்துரைகளினை செய்கின்றது.

### 5.4.3.1 வாக்காளர்களினைப் பதிவுசெய்தல்

இரு வேறுபட்ட முறைகளின் கூட்டினால் உருவாக்கப்பட்ட சிறப்புமுறை ஒன்றினை வாக்காளர் பதிவுகளின் போது கைக்கொள்ளுமாறு மதியுரைக்குழு பரிந்துரை செய்கின்றது.

1. ஒரு முறைமையின் கீழ் நாடு கடந்த தமிழீழ அசாங்கத்தின் அரசவைக்கான பிரதிநிதிகளினை தெரிவு செய்யும் தேர்தலில் வாக்களிக்க விரும்புவோர் வாக்களிப்பு நடைபெறும் தினத்தன்று வாக்களிப்பு நிலையத்திற்கு நேரடியாகச் சென்று தங்களது அடையாளத்தினையும் வாக்களிப்பதற்கான தகுதியினையும் சான்றுப்படுத்தும் முறையாகும். இம்முறையில் வாக்களிப்பின்போது வாக்காளரின் சுயவிபரங்கள் எதுவுமே ஆவணப்படுத்தப்படமாட்டாது.

2. மறு முறைமையின் கீழ் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான பிரதிநிதிகளினை தெரிவுசெய்யும் தேர்தலில் வாக்களிக்க விரும்புவோர் தங்களது விபரங்களினை முன்கூட்டியே பதிவுசெய்யலாம். இதன்போது வாக்களிப்பு நடைபெறும் தினத்திற்கு முன்னரே அவர்களது வாக்களிப்பதற்கான தகுதியினை தேர்தற்குழு பரிசீலனை செய்து உறுதிப்படுத்திக்கொள்ளும். இம்முறையில் வாக்களிப்பின்போது வாக்காளரினை அத்தாட்சிப்படுத்தல் சிரமமற்றதாக இருக்கும். பதிவின்போது பெறப்படும் சுயவிபரங்கள் தேர்தலின் நோக்கத்திற்கு புறம்பான எந்தக் காரணத்திற்காகவும் தேவைக்காகவும் பயன்படுத்தப்படமாட்டாது.

### 5.4.3.2. வாக்காளராவதற்கான தகுதிகள்

1. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான பிரதிநிதிகளினை தெரிவுசெய்யும் தேர்தலில் வாக்களிக்க விரும்பும் ஒருவர் குறிப்பிட்ட தேர்தல் நடைபெறும் தினத்தன்று தனது வயதின் 17வது ஆண்டினைப் பூர்த்தி செய்திருப்பதோடு ஈழத் தமிழர் பண்பாட்டு வாழ்வோடு பூர்வீகம், திருமணம், தத்தெடுத்தல் ஊடாக இணைந்தவர்களாக இருக்க வேண்டும். இத்தோடு தேர்தல் ஆணையத்தினரைத் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் தனது ஈழத் தமிழ் அடையாளத்தை நிறுவக்கூடியவரும் இதில் உள்ளடங்குவார். இவ் வகையினரின் தகுதி அவரவர் நிலைக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

### 5.4.3.3. வேட்பாளராவதற்கான தகுதிகள்

1. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையில் மக்களினை பிரதிநிதித்தவப்படுத்துவதற்காக நேரடியாக தெரிவு செய்யப்படும் நோக்கத்துடன் நடாத்தப்படும் தேர்தலில் ஒருவர் போட்டியிட முன்வருவாரேயானால் அவர் குறிப்பிட்ட தேர்தலில் தான் வாக்களிக்கும் தகுதியினைக் கொண்டிருப்பதாக உறுதிப்படுத்துவதோடு, தேர்தற்குழுவினால் நிர்ணயிக்கப்படும் கட்டுப்பணத்தினையும் (தேவைப்படின்) குறிப்பிட்ட காலவரையறைக்குள் சட்டபூர்வமுறையில் செலுத்தியிருக்கவேண்டும்.

2. வேட்பாளருக்கான கட்டுப்பணத்தொகையும் செலுத்தும் வழிமுறைகளும் குறிப்பிட்ட நாட்டிலுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான நாடுவாரியான செயற்பாட்டுக்குழுவினரால் தீர்மானிக்கப்படும்.

## 6. முன்மொழியப்படும் செயற்படுமுறைகள்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின சில குறித்துரைக்கப்பட்ட முக்கிய பணி இலக்குகளும் செயற்படுத்தப்படவேண்டிய முறைமைகளும் கீழே கூறப்பட்டுள்ளன.

### 6.1. அரசியல் வலு மையமாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்

கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் கட்டியெழுப்பப்பட்ட இராணுவ வலுச் சமனிலை ஈழத் தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தின் அடித்தளமாக அமைந்திருந்தது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது குறிக்கோள்களில் வெற்றி பெறுவது என்பது அதனால் கட்டியெழுப்பப்படும் அரசியல் வலுச் சமநிலையிலேயே தங்கியுள்ளது. ஒரு குறித்த காரணியினை அல்லது இயங்குபுள்ளியினை மற்றோர் காரணி தான் விரும்புகின்ற திசையில், விரும்புகின்ற கோணத்தில், தேவைப்பட்ட வேகத்தில் நகர்த்துவதற்கான ஆளுமையினை கொண்டிருப்பதனையே வலு எனக் கொள்ளலாம். ஆனால் இதனை இராணுவ மேலாதிக்கத்தினால் மட்டுமே பெறப்படும் விளைவாக கொள்ள முடியாது. இங்கு குறிப்பிடப்படும் வலு ஆளுமை எனப்படுவது பொருளாதார ஆற்றல்கள், சர்வதேச அங்கீகாரம், ஒருவரின் கருத்தியல் நிலைப்பாட்டிற்கு

கிடைக்கக்கூடிய தார்மீக ஆதரவு, மக்களின் பின்புலமும் பலமும், தலைமைத்துவ ஆற்றல்களும் தொலைநோக்கும் என்பவற்றின் திரண்ட பரிமாணமாகும். இராணுவ வலு வன்மையானதாகவும் ஏனைய வலுக்கள் மென்மையானதாகவும் வகைப்படுத்தப்படலாம். ஜோசவ் நை என்ற அரசியலறிஞர் குறிப்பிடும்போது மென்மையான வலு என்பது இராணுவபலத்திற்கு புறம்பாக மாற்று முறைமைகளினைக் கொண்டு ஒரு காரணி தான் விரும்பும் வகையில் மற்றோர் காரணியினை செயற்பட வைப்பதாகும். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சகல வகையான மென் வலுக்களினையும் பயன்படுத்தி தனது இலக்கினை அடைவதற்கு தன்னை அர்ப்பணிக்கும்.

புலம் பெயர் சமூகத்தின் மத்தியில் பல்வேறு நிறுவனங்களும் அமைப்புக்களும் குழுக்களும் உருவாகி செயற்பட்டாலும் அவற்றிலிருந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கீழ்க்குறிப்பிட்ட பலபரிமாணங்களில் சிறப்புத்தன்மையும் வேறுபாடும் கொண்டதாகவே அமையும்.

1. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தேசங்களின் ஆள்புல எல்லைகளினைக் கடந்த நிலையில் பொது தேசிய அடையாளத்தினை கொண்டிருக்கும் மக்களால் நேரடியான சனநாயக பங்களிப்பு பயிற்சி மூலம் உருவாக்கப்படுகின்றது.

2. இது தேசங்களின் ஆள்புல புவியியல் எல்லைக்குள் உருவாக்கப்படும் அரசாங்கங்களுக்கு சமாந்தரமாக செயற்படும் நிறுவனமாக இருக்கும்.

எனினும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை புலம்பெயர் ஈழத்தமிழர்களின் அரசியல் வலு மையமாக மாற்றுவதற்கு இங்கு குறிப்பிட்ட சிறப்பு அம்சங்கள் மாத்திரம் போதியவையல்ல.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனக்குரிய வலுச்சமநிலையினை கட்டியெழுப்புவதற்கு நான்கு வேறுபட்ட தொகுதியினரின் ஆதரவும் அங்கீகாரமும் முதன்மையானது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான செயலணி ஆழமாக நம்புகின்றது. கீழ்க் குறிப்பிடப்படும் நான்கு தொகுதியினரும் வெளிப்படையாகத் தங்கள் ஆதரவினையும் அங்கீகாரத்தினையும் பிரகடனப்படுத்தாவிட்டாலும் தங்களுடைய புரிந்துணர்வான செயற்பாடுகளின் மூலம் வழிவிடுவது அவசியமானதாகும்.

1. புலம் பெயர் ஈழத் தமிழர்கள்.
2. தாயகத்தில் வாழும் தமிழர்கள்.
3. உலகெங்கும் பரந்துவாழும் பல தேசங்களினைச் சேர்ந்த தமிழ்ச்சமூகம்.
4. சர்வதேச சமூகம்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை ஈழத்தமிழர்களின் அரசியல்வலுமையமாக கட்டியெழுப்புதல் என்பது அதன் இலக்குகளினை அடைவதற்காக முன்வைக்கப்படும் செயற்திட்டங்களிலும் அதற்கான மூலோபாயங்களிலும் அவற்றினை

நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்படும் நிறுவனக் கட்டமைப்புக்களின் வினையாற்றல் ஆளுமையிலும் அவற்றினை தாங்கி நிற்கக்கூடிய மக்கட்பலத்திலுமே தங்கியுள்ளது. உலகந்தழுவிய கொள்கை வகுப்பாளர்கள் மீது செல்வாக்கு செலுத்துவதில் சிறிய மக்கட்தொகையான ஈழத்தமிழர்களினால் உருவாக்கப்படும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மட்டுப்பாடுகளினைக் கொண்டிருக்கும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது ஒன்றே. எனினும் உலகின் ஆதிக்க வலுச்சக்திகளின் கவனத்திற்கு ஈழத்தமிழர்களின் நலன்களினை கொண்டு செல்வதற்கும் அதன் பொருட்டு இயக்கவியல் தன்மை நிறைந்த செயற்படுதளத்தினை கட்டியெழுப்புவதற்கும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முறைமைகளினைக் தேடிக்கண்டறிந்து செழுமைப்படுத்தும்.

## 6.2. தற்போது செயற்படுகின்றவையும் எதிர்காலத்தில் உருவாகக் கூடியவையுமான நிறுவன அமைப்புக்கள் தொடர்பான நிலை

இயங்குதிறன் நிறைந்த புலம்பெயர்சமூகங்களில் ஒன்றாக வளர்ச்சி பெற்றுள்ள ஈழத் தமிழர்களிடையே பல்வேறு குறிக்கோள்களினை அடிப்படையாகக் கொண்ட சமூகக் குழுக்களும் நிறுவன அமைப்புக்களும் தோற்றம் பெற்று ஆக்கபூர்வமாக செயற்படுவது இயல்பானதாக காணப்படுகின்றது. இத்தகைய அமைப்புக்கள் தங்களுக்கென தெளிவான குறிக்கோள்கள், செயற்பாட்டு இலக்குகள், அங்கத்தவர்கள், ஆகியவற்றினைக் கொண்டுள்ளன. எனினும் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் தேசிய அரசியல் வேட்கைகளின் வழிநின்று சவால்களினை வென்றெடுப்பதற்காக சமூகத்தினை வழிநடத்துவதற்கும் பல்வேறு தளங்களிலும் பலபரிமாணங்களிலும் செயற்படும் நிறுவனங்களினை ஒருங்கிணைப்பதற்கும் தேசிய மட்டங்களிலும் சர்வதேசமட்டத்திலும் செயற்படக்கூடிய அதிஉயர்நிறுவனம் ஒன்றின் தேவை உணரப்பட்டுள்ளது. இதனை முன்மொழியப்பட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நிறைவு செய்யும்.

சனநாயகரீதியான தேர்தல் செயன்முறையூடாக தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளினைக் கொண்டு உருவாக்கப்படும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஏனைய சமூகம் சார்ந்த கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைந்தும் ஒத்திசைவான முறையிலும் செயற்படும்.

முன்மொழியப்பட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான பிரதிநிதிகளினை நேரடித் தேர்தல் மூலம் புலம்பெயர் ஈழத் தமிழ்ச் சமூகம் தங்களது சனநாயக உரிமைகளினைப் பயன்படுத்தி தெரிவுசெய்யவிருப்பதனை மிக சிறப்பான ஒரு விடயமாகவே கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு சுதந்திரமும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட சூழ்நிலையில் மக்களின் நேரடியான சனநாயப்பயிற்சி மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளினைக் கொண்டதாக நாடு கடந்த தமிழீழ அரசவை அமைக்கப்படும் போது அதுவே அந்த நிறுவனத்திற்குரிய அங்கீகாரத்தினையும் வலுவினையும் வழங்குவதாக உள்ளது. தேர்தலினூடாக தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தேர்தல் நடைபெறாத நாடுகளுக்கான பிரதிநிகளினை பேராளர்களாக அடையாளங்கண்டு தெரிவுசெய்து தங்கள் அவையில் இணைப்பார்கள்.

தற்போது இயங்குநிலையிலுள்ளதும் எதிர்காலத்தில் உருவாகக்கூடியதுமான சமூக நிறுவனங்களுடன் எதிர்காலத்தில் பேணப்படவேண்டிய உறவுகள் தொடர்பில் நல்லாட்சி கருத்தியலின் அடிப்படையில் இறுதித் தீர்மானமெடுக்கும் உரிமையினை தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் கொண்டிருப்பர். சில நாடுகளில் புலம் பெயர் ஈழத் தமிழ் மக்கள் சார்பாக புதிய தேசியமட்டக் கட்டமைப்புக்களினை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய சனநாயக முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை. எனினும் அம் முயற்சிகளுக்கு நேரடியான ஆதரவினையோ எதிர்ப்பினையோ நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சார்பாக தெரிவிக்கும் உரித்து உருவாக்கக்குழுவுக்கு இல்லை. நாடு கடந்த தமிழீழ அரசாங்கதிற்கும் மற்றைய உள்ளூர்மட்ட நிறுவனங்களுக்கும் இடையேயான செயற்பாட்டு உறவு முறைகள் குறித்த எல்லாவகையான இறுதி முடிவுகளும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்பட்டதன் பின்னர் அவர்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 6.3. சர்வதேச சமூகத்துடனான செயற்பாடுகள்

மதியுரைக்குழு உறுப்பினர்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு நாடுகளின் இராசதந்திரிகளுடனும் கொள்கை வகுப்பாளர்களுடனும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களினை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர். அதே போன்று நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்களும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற எண்ணக்கருத்திற்கு சார்பாகவும் அதன் உருவாக்கத்திற்காகவும் ஆதரவினைத் திரட்டும் நோக்குடன் செயற்படுமாறு ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவு செய்யப்பட்ட பின்பு இதே வகையான சர்வதேசத் தொடர்புகள் இன்னும் கூடிய பரிமாணத்தில் இவ்வரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும்.

பன்னாட்டு அரசாங்க அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களின் போது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினை புறநிலை அரசாங்கத்துடன் (Government in Exile) இணைத்துப் பார்க்கும் தவறான புரிதல் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ் அதிகாரிகள் சிறீலங்காவினை ஒரு சட்டபூர்வ அரசாங்கமாக சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ள நிலையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு புறநிலை அரசாங்கமாக இருக்கும் போது அதனுடன் தொடர்புகளைப் பேணுவதில் தமக்குள்ள தயக்கங்களை தெரிவித்திருந்தார்கள். இதனால் முன்மொழியப்பட்டுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கும் புறநிலை அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் தெளிவாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது செயற்பாடுகளின் போது தற்போது கட்டியெழுப்பப்பட்டுள்ள சர்வதேச உறவுகளினையும் இராசதந்திர தொடர்புகளினையும் கவனத்திற் கொள்ள வேண்டும். தற்போதுள்ள சட்டபூர்வ அரசுகளுக்கு சமமான இராசதந்திர உறவு நிலைகளினையோ அல்லது வெளிப்படையான அங்கீகாரத்தினையோ நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உடனடியாக எதிர்பார்ப்பது யதார்த்தமாகாது.

### 6.3.1. சர்வதேச சமூகத்துடன் செயலாற்றுவதற்கான மூலோபாயங்கள்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது இராசதந்திர அலகாக செயற்படுவதற்குரிய பிரிவாக வெளிநாட்டுறவுகள் பிரிவு ஒன்றினை உருவாக்கி அதனூடாக பொருத்தமான பணிகள் யாவற்றினையும் ஒருங்கிணைக்க வேண்டும். இவ் வெளிநாட்டுறவுகள் பிரிவு பொருத்தமான வழிமுறைகளூடாக சர்வதேச கட்டமைப்புக்களுடனும் நாடுகளின் அரசாங்கங்களுடனும் தொடர்பாடல்களினை ஏற்படுத்துவதுடன் அவர்களின் ஆதரவினை ஈழத்தமிழர்களின் அரசியல் சுயநிர்ணய உரிமையினை சர்வதேசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுக்கும் சட்டங்களுக்கும் ஊடாக வென்றெடுப்பதற்கான சூழலினையும் கட்டியெழுப்ப வேண்டும். நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதன்மையான பணி சர்வதேசத்தின் ஆதரவுடன் ஈழத்தமிழர்கள் தங்களது அரசியல் சுயநிர்ணய உரிமையினை வென்றெடுத்து இறையாண்மையினைப் பிரயோகிப்பதற்கு வழி செய்வதாக அமையும்.

மேலும், இனப்படுகொலைக்கு தமிழ்மக்கள் உள்ளாக்கப்பட்டு வருவதனை அரசியல் மற்றும் சட்ட வழிமுறைகள் மூலமாக சர்வதேச சமூகத்தின் முன் நிறுவி தமிழர் தேசம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இன அழிப்பிற்கு எதிரான ஈடுசெய் பரிகாரமாக தமிழீழத் தனியரசினை நிறுவுவதற்கான திட்டத்தை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்வைக்கும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் மற்றுமோர் பணியாக ஈழத் தமிழரின் தாயகத்தில் வாழுகின்ற மக்களின் அடிப்படை மனித உரிமைகளினைப் பாதுகாப்பதும், அவர்களின் இன, பண்பாட்டு அடையாளங்களுக்கு அப்பால் நின்று அவற்றினை உத்தரவாதப்படுத்தி செழுமைப்படுத்துவதும் அமையும். தேசங்களின் ஆள்புல எல்லைகளினைக் கடந்ததாக கட்டியெழுப்பப்படும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனக்குரிய எல்லைகள் கடந்த சிறப்புநிலையினைப் பயன்படுத்தி சர்வதேச பரப்பளவிலும் தேசியங்களினைக் கடந்த நிலையிலும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதற்காக செயற்படும். இப்பணிகளில் உலகந்தழுவிய அளவில் செயற்படுவதற்காக சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைக்கண்காணிப்பகம் போன்ற அமைப்புக்கள் செயற்படும் நிலையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது பணிகளினை குறிப்பாக இலங்கைத் தீவினுள் வாழும் தமிழ்மக்களின் உரிமைகளினைப் பாதுகாப்பதற்காக ஒருங்கிணைக்கும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனக்குரிய உலகந்தழுவிய செயற்பாட்டுத் தளத்தினைப் பயன்படுத்தி இலங்கைத்தீவினுள் குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பிரதேசத்தினுள் சிறீலங்காவின் ஆட்சியாளரால் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களினையும் யுத்தக் குற்றங்களினையும், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களினையும் வெளிக்கொணருவதோடு அதற்குப் பொறுப்பானவர்களினை நீதியின்முன் நிறுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் அத்தகைய துன்பியல் நிகழ்வுகளும் கொடுமைகளும் நிகழாமல் இருப்பதனையும் அது தொடர்பில்

சட்டமுறையான அரசுக்கு இருக்கக்கூடிய கடப்பாட்டினுள் சிறீலங்கா அரசு கட்டுப்படுத்தப்படுவதனையும் உறுதி செய்யும்.

## 6.4. இலங்கைத்தீவில் இருக்கும் உள்ளூர் தமிழ் அரசியல் சமூகத்துடனான உறவுகளினைப் பேணுதல்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தாயகத்திலுள்ள அரசியல் தலைவர்களின் தீர்மானமெடுக்கும் உரிமையினையும் முக்கியத்துவத்தினையும் அங்கீகரித்து முதன்மைப்படுத்தும் அதேவேளையில் நாடு கடந்த அரசாங்கத்தின் கொள்கைளோடு முரண்படாத விடயங்களில் அவர்களின் தீர்மானங்களுக்கு எதிராக தான் செயற்படாமலிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும். எனினும் இலங்கைத்தீவினுள் எழக்கூடிய அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக உள்ளூர் தலைமைகள் ஈழத்தமிழரின் அரசியல் வேட்கையான அரசியல் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தினையும் அரசியல் இறைமையினையும் வலிமையிழக்கச் செய்வதற்கு ஏதுவான தீர்மானங்களினை எடுக்க முற்படும் போது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அதனைக் கட்டுப்படுத்தக்கூடிய மாற்றுவழிகளினைத் தேடும். பொதுவான கொள்கைகளை வகுப்பது தொடர்பாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தாயகத்திலுள்ள தமிழ்த் தலைவர்களுடன் உரிய கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்.

ஈழத் தமிழர் தாயகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைவர்களையும் குடிசார் சமூகக் குழுக்களையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தில் உத்தியோகப்பற்றற்ற வகையில் வாக்குரிமையுடனோ அல்லது இல்லாமலோ அமர்த்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென மதியுரைக்குழு பரிந்துரைக்கிறது. நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவையில் கலந்து கொள்ள வேண்டிய உள்நாட்டு குடிசார் சமூகக் குழுக்களில் உள்ளூர் அரசியல் பிரதிநிதிகள், பல்கலைக்கழக சமூகம், மதகுருமார்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவை உள்ளடங்கும்.

மக்களுக்கான நிவாரண முயற்சிகளை ஒருங்கிணைக்கும் தேவைகள் தொடர்பாக ஈழத் தமிழர் தாயகத் தலைவர்களுடன் தொடர்புகள் பேணப்படும்.

## 6.5. முஸ்லீம் மக்களுடனான உறவுநிலைகள்

இலங்கைத் தீவினுள் வாழும் முஸ்லீம் மக்கள் தங்களது மதஅடையாளத்தின் பேரால் தங்களினை தனியொரு இனமாக கருதிக் கொண்டாலும் அவர்களும் தமிழ் பேசும் மக்களின் ஒரு பகுதியினரே. தமிழ் மொழியினைச் சிறப்பித்துச் செழுமைப்படுத்தியதில் முஸ்லீம் சமூகமும் அதன் சிந்தனையாளர்களும் கொண்டிருக்கும் பங்கு ஏனைய தமிழ் பேசும் மக்களிற்கு குறைந்ததாக இல்லை. கடந்த காலத்தில் முஸ்லீம்கள் மத்தியில் உருவாகிய அரசியற்தலைமைகளின் ஆளுமைகளினைத் தாண்டியும் சிங்களத் தேசியவாதத்தின் மேலாதிக்க அச்சுறுத்தல் அச் சமூகத்தினைக் குறிவைத்துள்ளது. தமிழ் பேசும் மக்கள் என்கின்ற பொதுத்தளத்தில் ஒருங்கிணைந்து செயற்படுவதுதான் சிங்கள பௌத்த தேசியவாத மேலாண்மையிலிருந்து விடுபடுவதற்கான மூலோபாயமாக இருக்க முடியும். எனினும் அரசியலமைப்புரீதியாக அதிகாரங்களினை பகிர்வதற்கான

ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் போது மதநம்பிக்கைகளின் அடிப்படையிலான ஒரு இனக்குழுவாக முஸ்லீம் மக்களினை வகைப்படுத்துதல் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இவ்வாதத்தின் அடிப்படையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தில் முஸ்லீம் மக்களின் பிரதிநிதித்துவம் இடம்பெறும் வகையில் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் அரசியலமைப்பு ஒழுங்குகள் செய்யப்படவேண்டும்.

முஸ்லிம் மக்களின் சட்டபூர்வ உரிமைகளினையும் அக்கறைகளினையும் அவர்களின் பிரதிநிதிகள் முன்மொழிந்து அங்கீகாரம் பெறுவதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இந் நோக்கத்திற்காக சகல நாடுகளிலும் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்து முஸ்லீம் மக்களின் பிரதிநிதித்துவத்தினை கண்டறிந்து அதற்குரிய விகிதாசார பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட வேண்டும். ஏனைய மதங்களினைச் சார்ந்த ஈழத் தமிழர்களுக்கு இச் சிறப்பு ஒழுங்குகள் பொருத்தமானதாக அமையமாட்டா. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகள் யாவும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் 1948 ஆம் ஆண்டின் மனித உரிமைச் சாசனத்தினை அடியொற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

தாயகத்தில் சுதந்திர தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்படும் வேளை மனித உரிமைகளினைப் பாதுகாப்பதற்கும் முஸ்லீம் மக்களின் கூட்டுப்பிரதிநிதித்துவத்தினை அங்கீகரிப்பதற்கும் ஏதுவான வலுவான அரசியலமைப்பு மற்றும் நிறுவனக்கட்டமைப்புக்களினை உறுதி செய்து கொள்ளும் வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் செயற்படவேண்டும். முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்தும் இசைந்தும் தமிழ் பேசும் மக்கள் என்கின்ற ஓர் அடையாளத்தின் கீழ் வாழ வேண்டும் என்பது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் விருப்பாக இருந்தாலும் விரும்பும் போது பிரிந்து சென்று தனியாக வாழும் சுயநிர்ணய உரிமை முஸ்லீம் மக்களுக்கும் உரியது என்பது ஏற்றுக்கொள்ளப்படும்.

## 6.6 தென்னாசியாவின் மாறி வரும் புவிசார் அரசியல் நிலைமை பற்றி

Far Eastern Economic Review சஞ்சிகையின் ஒக்டோபர் 2009 இதழில் வெளி வந்த கட்டுரையொன்று பின்வருமாறு குறிப்பிடுகிறது. '' சமாதானத்தின் விளைச்சல் என்பது எவ்வளவு ஏமாற்றுகரமானது என்பதனை ஏற்கனவே பாரிய அளவில் உள்ள இராணுவத்தை மேலும் விரிவுபடுத்த அவர் எடுத்துள்ள முடிவின் ஊடாக அறிய முடிகிறது. துருப்புப் பலத்தில் சிறிலங்கா இராணுவம் பிரித்தானியா மற்றும் இஸ்ரேலிய இராணுவத்தை விடப் பெரியது. 1980களின் இறுதிப்பகுதியில் இருந்து இன்று வரை சிறிலங்கா இராணுவம் 5 மடங்கு வளர்ச்சியடைந்து 200,000 நிலையான படைவீரர்களைக் கொண்ட இராணுவமாக உள்ளது. வெற்றியுடன் 'அணையாத விழிப்புநிலை' எனும் பெயரில் 200,000 ஆக இருந்த இராணுவத்தின் எண்ணிக்கை 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டு 300,000 ஆக உயர்த்தப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு மே மாத வெற்றியின் பின்னர் போராளிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாக்கவென்று 50,000 புதிய துருப்புக்களை இணைப்பதற்குரிய முயற்சியினை சிறிலங்கா அரசாங்கம் அறிவித்தது. இவ் விரிவாக்கம் சிறிலங்கா இராணுவத்தினை வல்லரசுகளான பிரான்ஸ், ஜப்பான், ஜேர்மனி போன்றவற்றை விட பாரிய

இராணுவமாக மாற்றி விடும்''

உள்ளக இராணுவ அச்சுறுத்தல் இல்லாத ஒரு சூழலில் இராணுவமயப்பட்ட சிறிலங்கா தென்னாசியாவின் அமைதிக்கும் ஸ்திரநிலைக்கும் அச்சுறுத்தலாக அமையும். மாறாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கமோ தென்னாசியாவின் அமைதிக்கும் ஸ்திரநிலைக்கும் பங்களிக்கும் வாய்ப்புக் கொண்டது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது அரசியல் மூலோபாயங்களை வகுக்கும் போது இந்து சமுத்திரப் பகுதியில் சிறிலங்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையையும் தென்னாசியாவின் புவிசார் அரசியல் நிலைமைகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயலகம் இவ் விடயம் தொடர்பாக ஆராய்ந்து உரிய மூலோபாயங்களைக் கண்டறிவதற்காக சிறிய பிரிவு ஒன்றினைக் கொண்டிருக்கலாம். இத் துறையில் தொழிற்படும் 'அறிஞர்குழாம்' போல இப்பிரிவின் பணிகளும் அமையலாம். இதேவேளை நடவடிக்கைகளின் சட்டபூர்வத்தன்மை மிக உயர்வானதாக இருக்க வேண்டும்.

## 6.7. தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களும் அவர்கள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இலட்சியங்களோடு முரண்படாமல் பணிபுரிதலும்

வழிகாட்டிக் கோட்பாடுகளுக்கு இணைந்த வகையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பணி புரிவதனை உறுதிப்படுத்தும் பொறிமுறைகள் தேவை என வலியுறுத்தப்பட்டுள்ளது.

### 6.7.1. மீள அழைக்கும் வழிமுறை

தெரிவு செய்யப்பட்ட ஒரு உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடியும் முன்பாகவே நீக்கப்படுவதற்கு வழி செய்வதே மீள அழைத்தல் என்ற நேரடி ஜனநாயக வழிமுறையாகும். நேரடி ஜனநாயக வழிமுறைகளின் கருவியாக இம் மீள அழைத்தல் கருதப்பட வேண்டுமானால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலத்தை இடை நிறுத்தும் முயற்சி மக்களிடமிருந்தே எழ வேண்டும்.

இந்த வழிமுறையில் ஒரு குறிப்பிட்ட தேர்தற் தொகுதியின் குறித்த உறுப்பினர் தொடர்பாக அதிருப்தி ஏற்பட்ட நிலையில் மீள் அழைப்பு வழிமுறை ஆரம்பிக்கப்படலாம். இவ் வழிமுறை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் ஜனநாயக கோட்பாடுகளை நிலை நிறுத்தும் நோக்கத்தோடு இரு தரப்பினரதும் அதாவது வாக்களிக்கும் மக்களதும் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரதும் உரிமைகள் பற்றி உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். மற்றைய ஜனநாயக வழிமுறைகள் போலவே மீள் அழைப்பு வழிமுறையும் பொதுசனப்பங்களிப்பிற்கும் திறன் வாய்ந்த ஆட்சிமுறையினைப் பேணுவதற்கும் இடையிலான சமனிலையிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அரசியல் அடிப்படைகளினை விட்டு விலகிப் போகின்றார் என்றால் அவர் தொடர்பாக மீள் அழைப்பு

வழிமுறைகளினை மேற்கொள்ள முடியும். அரசியல் அடிப்படைகள் என்று நாம் கருதுவது தமிழ் மக்களின் தாயகம், தமிழ்த் தேசியம், தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை, மற்றும் அவர்களின் இறைமை என்பவற்றினையாகும். தமது அதிகாரத்தினை தவறான வழிகளில் பயன்படுத்தினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை மீள் அழைப்புச் செய்யலாம்.

இம் மீள் அழைப்பு பொறிமுறை நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும். இப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வாக்காளர் தொகை போன்ற விபரங்கள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும்.

## 7. அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் மதியுரைக்குழுவின் வகுபாகம்- இடைக்கால ஏற்பாடுகள்

மதியுரைக்குழு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான தேர்தல்களை நடாத்துவதற்கும் அதனை அமைப்பதற்குமான முறைமைகளையும் பொறிமுறைகளையும் பரிந்துரைப்பதுதான் தனக்கு வழங்கப்பட்ட பிரதான பணி என்பதனை நன்கு புரிந்திருந்தது. இருந்த போதும் மதியுரைக்குழுவின் இவ் அறிக்கை வெளியிடப்பட்டதில் இருந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவைக்கான தேர்தல்களை நடாத்தி முடிக்கும் வரையான காலத்தில் சில மேலதிகப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நடைமுறை அவசியம் தற்போது உணரப்படுகிறது.

இந்தப் பணிகளில் வெளிநாட்டு அரசாங்கங்கள், அனைத்துலக செயலமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றுடன் நேரடித் தொடர்புகளைப் பேணிக் கொள்வதுடன் தாயகத்திலும் புலம் பெயர்ந்தும் வாழும் தமிழ் பேசும் மக்களினது சமூக பொருளாதார பண்பாட்டு உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தலும் உள்ளடங்குகின்றன. மதியுரைக்குழு சிறுவர் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொண்ட போதும் ஏனைய விடயங்களில் வேறு அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றமையால் கூடுதல் கவனம் செலுத்தவில்லை. எனினும் மதியுரைக்குழு இவ் விடயங்களில் ஏனைய தமிழ் அமைப்புக்களால் கோரிக்கைகள் விடுக்கப்பட்டால் முழு மனதுடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளது.

தேர்தல்களை நடாத்தி முடிப்பதில் உள்ள சிரமங்கள் தொடர்பான அக்கறைகள் மதியுரைக்குழுவிற்கு தனிப்பட்டவர்களாலும் குழுக்களாலும் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. இதன் நிமித்தம் தேர்தல் நடைமுறை தொடர்பான பின்வரும் பரிந்துரைகளை மதியுரைக்குழு மேற்கொள்கிறது.

1. இவ் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரும் மதியுரைக்குழு தனது பணியினை தொடர்தல் வேண்டும். நாடுவாரியான செயற்பாட்டுக் குழுக்களதும் தேர்தல் ஆணையங்களதும் வேணடுதல்களுக்கு ஏற்ப அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் வழங்குதல் இத்தகைய ஒரு செயற்பாடுகளில் ஒன்றாக இருக்க முடியும்.

2. மக்கள் எண்ணிக்கை குறைவாக உள்ள இடங்களிலும், இந்தியா போன்ற தேர்தல்களை நடாத்துவதற்கு வாய்ப்புக் குறைந்த இடங்களிலும் மக்கள் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்குவது தொடர்பான விடயங்களில் தேவைக்கேற்ப பரிந்துரைகளை வழங்கல். இத்தகைய பரிந்துரைகள் சில நாடுகளின் நாடுவாரியான செயற்பாட்டுக்குழுக்கள் தமக்கு அண்மையிலுள்ள நாடுகளில் தமது செயற்பாடுகளை விரிவாக்குவது தொடர்பான விடயங்களையும் உள்ளடக்கலாம்.

3. நாடுவாரியான செயற்பாட்டுக் குழுக்களாலும் தேர்தல் சபைகளாலும் தீர்வு காணப்பட முடியாத பிணக்குகளுக்கு அவர்களின் வேண்டுதல்களுக்கு அமைய நடுவர்களாகச் செயற்படுதல்.

4. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் அமைப்புசபையின் தேவைகளுக்கும் வேண்டி அழைக்கப்படும் போது தமது பணியை வழங்க மதியுரைக்குழு தயாராக உள்ளது. தேவைப்படின் அரசியல் அமைப்புசபை தனக்குத் தேவையான சிறப்பு ஆலோசனைகளுக்குத் தனியான மதியுரைக்குழுவினை அமைத்தலும் இங்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

மதியுரைக்குழு பின்வரும் விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளையும் ஆராய்ந்தது.

1. உருவாக்கக்குழு தொடர்பான விடயங்கள். 2. செயலகம் உருவாக்கம் மற்றும் வளர்ச்சி தொடர்பான விடயங்கள். 3. உத்தியோகபூர்வமான பத்திரிகை பற்றிய விடயங்கள். இது தொடர்பாக பங்களிக்கத் தயாராக உள்ள மதியுரைக்குழு இப் பணிகள் பற்றிய தகவல்கள் உரிய நேரங்களில் அறிவிக்கப்படும் என்பதில் உடன்பட்டுக் கொண்டது.

## 8. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான வழிகாட்டிக் கோட்பாடுகளும் செயற்திட்டங்களும்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான இலக்குகள் குறித்தும் பரிந்துரைக்குமாறு மதியுரைக்குழுவிடம் கோரப்பட்டது. ஈழத் தமிழர் தேசத்தின் நியாயமான அரசியல் அபிலாசைகளினை வென்றெடுக்க அயராது உழைப்பதே இதன் அடிப்படை இலக்கு. இதனை விட ஏனைய செயற்பாடுகளையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். இச் செயற்பாடுகள் தமிழீழ தேசத்தை வென்றெடுப்பதற்கும் தமிழீழ தேசம் உலக சமுதாயத்தின் மத்தியில் தன்னை நிலைநிறுத்துவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதற்கும் வலுவான அடித்தளமாக அமையக்கூடியவை. இத்தகைய செயற்பாடுகள் புலம்பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் தமது தாயகத்திலுள்ள தமிழ் மக்களுடனும் உலகத் தமிழர் சமூகத்துடனும் கொண்டுள்ள இணைப்பினை வலுவூட்டி உறுதி செய்யும். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஒரு இலக்கு இத்தகைய உறவுகளை உறுதி செய்தல் ஆகும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திற்கான யாப்பினை அமைக்கும் போது பின்வருவன வழிகாட்டிக் கோட்பாடுகளாக இருக்க வேண்டும் எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

## 1. தமிழீழத்தினை வென்றெடுப்பதற்கான உறுதிப்பாடு

**இதுவே கடந்த 35 ஆண்டுகளாக தமிழர் விடுதலைப் போராட்டத்தின் இலக்காக இருந்து வருகிறது.**

சுயநிர்ணய உரிமை என்பது காலனித்துவச் சூழலில் மட்டும்தான் பிரயோகிக்கப்படமுடியும் என்ற கருத்து சிலரிடம் நிலவுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஐ.நா. பொதுச்சபையின் தீர்மானம் 1514 (''காலனித்துவ நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவது பற்றிய ஐ.நா.பிரகடனம்'') காலனித்துவச் சூழ்நிலையிலேயே நிறைவேற்றப்பட்டது என்பது உண்மைதான். எனினும் 1970 இல் ஐ.நா.அவையின் ''நட்புறவுகள்'' தொடர்பான பிரகடனம், காலனித்துவ மற்றும் காலனித்துவ ஆட்சியின் கீழ் இருக்காத எல்லா மக்களுக்கும் சுயநிர்ணய உரிமையினை வழங்குகின்றது. இது சர்வதேச சட்டங்களின் ஒரு பகுதியாகவும் இப்போது உள்ளது. ஐ.நா.அவையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியான ஆவணம் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரிக்கின்றது. இந்த ஆவணம் காலனித்துவ காலத்தினைச் சேர்ந்ததல்ல. கனடிய உயர்நீதிமன்றத்தின் கியூபெக் தொடர்பான தீர்ப்பு ஒன்றும் சுயநிர்ணய உரிமையினை உறுதிப்படுத்துகின்றது. கனடிய உயர்நீதிமன்றம் பின்வருமாறு கூறுகின்றது.

*''மக்கள்'' (people) என்போர் அரசாங்கம் ஒன்றின் கீழே இருக்கக்கூடிய மக்கள் தொகையின் ஒரு பகுதியினைக் குறித்து நிற்கலாம். சுயநிர்ணய உரிமை என்பது மனித உரிமை என்ற அடிப்படையிலேயே உருவாக்கம் பெற்றது. ''தேசம்'' ''அரசு'' ஆகிய இரண்டையும் குறிப்பிடுகின்ற ஆவணங்களிலேயே இந்தக் கருத்தும் பயன்படுத்தப்படுகிறது. இங்கு ''மக்கள்'' என்பது ஒரு அரசின் கீழ் இருக்கும் ஒட்டுமொத்தமான மக்களையும் குறிக்கவில்லை.*

*சுயநிர்ணய உரிமை என்பது ஒரு அரசின் கீழ் வாழுகின்ற மக்கள் அனைவரையும் ஒரு மக்களாக பார்க்கும் வகையில் குறுக்கப்படுவது, ஏற்கனவே சுயநிர்ணய உரிமையினை அனுபவிக்கின்ற மக்களுக்கு மீளவும் அவ் உரிமையை வழங்குவது போலத்தான். இதையும் விட இத் தலைப்பு பற்றிய பெரும்பாலான ஆவணங்களில் காணப்படுவது போல ஏற்கனவே உள்ள நாடுகளின் எல்லைகள் உடைக்கப்படாமல் பார்க்கப்படவேண்டும் என்ற கருத்து எந்த நோக்கத்திற்காக இவ் உரிமை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டதோ அதற்கு எதிரானதாகவே அமைந்து விடுகிறது.''*

காலனித்துவ சூழலுக்கு வெளியேயும் புறநிலைச் சுயநிர்ணய உரிமையினைப் பயன்படுத்தமுடியும் என்பதனையும் கனடிய உயர்நீதிமன்றத் தீர்ப்பு வலியுறுத்துகிறது. இந்த தீர்ப்பு 60களிலோ 70களிலோ வழங்கப்பட்டது அல்ல. 1997 இல் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பாகும்.

சிறிலங்காவின் முன்னைநாள் ஐ.நாவின் பணியாளர் கோர்டன் வைஸ் அவர்கள் கூற்றுப்படி சிறீலங்கா அரசினால் முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் 40,000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். சுமார் 300,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிறீலங்கா அரசாங்கத்தினால் சொந்தக் குடியிருப்புக்களிலிருந்து இடம் பெயர்க்கப்பட்டு உள்ளூரில் அகதிகளாக ஆக்கப்பட்டதுடன் சிங்களவர்களின் மேலாண்மைக்குள் - 99% மும் சிங்களவர்களினைக் கொண்ட இராணுவத்தின்- நிரந்தரமாக உட்படுத்தப்பட்டுள்ளதுடன் யுத்தத்தின் பெயரால் கண்மூடித்தனமான விமான குண்டுவீச்சுக்களுக்கும் கனரக பீரங்கிக் குண்டுகளுக்கும் இலக்காகி பாரியளவிலான உடற்காயங்கள், உளவியற் பாதிப்புக்கள், மனஅதிர்ச்சி, பேதலிப்பு என நீண்டகால தாக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவற்றுடன் அம் மக்களின் பிரதேசத்தில் இருந்திருக்கக்கூடிய சகல கட்டிடங்கள், பௌதீக வளங்கள், பொருண்மிய கட்டுமானங்கள் யாவும் தகர்த்தெறியப்பட்டும் சமூக கட்டமைப்புக்களும் தமிழ்மக்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதிநிதிகளாக விளங்கிய தமிழீழ விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்டு செழுமைப்படுத்தப்பட்டிருந்த குடிசார் கட்டமைப்புக்களும் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. உள்ளூரில் இடம் பெயர்க்கப்பட்டுள்ள 300,000 தமிழ் மக்களும் தமக்குரிய மனிதாபிமான உதவிகளினை சுதந்திரமாக பெறுவதற்கான உரிமையினைக்கூட சிறீலங்காவின் சிங்கள பெரும்பான்மை அரசு மறுத்துள்ளது. மனிதாபிமான உதவிப்பணிகளினை மேற்கொண்டு வந்த சர்வதேச தன்னார்வ அமைப்புக்களினை தடை செய்து தமிழ் மக்களின் பிரதேசத்திலிருந்து வெளியேற்றியதன் மூலம் அப்பாவிப் பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய உணவு, மருந்தும் மருத்துவவசதிகளும், குடியிருப்பதற்கான பொருட்கள் மற்றும் வேறு அத்தியாவசிய சேவைகளினை அவர்கள் பெற்றுக் கொள்ள முடியாமல் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள். இவை யாவும் மிக துல்லியமாகத் திட்டமிடப்பட்ட இனப்படுகொலை நிகழ்ச்சித்திட்டத்தின் பாகங்களாகவும் தமிழ்மக்களின் இருப்பினை முற்றாக இல்லாதொழிக்கின்ற இலக்குக் கொண்டவையாகவுமே காணப்படுகின்றன.

இனப்படுகொலைகள் தொடர்பான சாசனம் ''தற்காத்துக்கொள்ளல்'' என்ற எண்ணக்கருவினை அங்கீகரிக்கின்றது. மனித உரிமை உடன்படிக்கைகளின் உள்ளடக்கமாகவுள்ள தற்காத்துக்கொள்ளல் என்ற எண்ணக்கரு குழுக்களின் தேசிய அடையாளங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றது. குறிப்பிட்ட மக்கள் குழு இனப்படுகொலை அச்சுறுத்தலுக்கு ஆளாகும் போது அம் மக்கள் தங்கள் இருப்பினைத் தக்க வைத்து தம்மைப் பாதுகாப்பத்துக் கொள்வதற்காக தனியாக பிரிந்து சென்று தமக்கென சுதந்திரமான தேசத்தினை உருவாக்கும் உரிமை இனஅழிப்பு பிரகடனத்தில் ஈடுசெய் பரிகாரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வழிகாட்டிக் கோட்பாடு: 1**

**நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சுதந்திரமும் இறைமையும் உடைய தமிழீழத் தனியரசை அமைப்பதற்காகப் பாடுபடும்.**

**இவ் இலக்கை அடையும் மூலோபாயமானது தமிழர் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அனைத்துலக அங்கீகாரத்தினை வென்றெடுத்து இதன் அடிப்படையில் ஈழத் தமிழர் தேசம் தனது உரிமையைப் பிரயோகிப்பதாக**

**அமையும்.**

**மேலதிக மூலோபாயமாக இனப்படுகொலைக்கு தமிழ்மக்கள் உள்ளாக்கப்பட்டு வருவதனை அரசியல் மற்றும் சட்ட வழிமுறைகள் மூலமாக சர்வதேச சமூகத்தின் முன் நிறுவி தமிழர் தேசம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இன அழிப்பிற்கு எதிரான ஈடுசெய் பரிகாரமாக தமிழீழத் தனியரசினை நிறுவுவதற்கான திட்டத்தை முன்வைத்தல் இருக்கும்.**

## 2. மதச் சார்பின்மை

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் தமிழ் ஈழம் மதச்சார்பற்ற அரசாக அமையும் எனவும் இவ் அரசின் ஆழுகைக்குட்பட்ட மக்கள் அனைவரது மதங்களுக்கும் சமமான உரிமையும் பாதுகாப்பும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைப்பாடு இந்திய அரசியல் யாப்பிலிருந்த மதச்சார்பின்மை அம்சத்தால் கவரப்பட்ட தமிழர் தேசிய விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்களால் பின்பற்றப்பட்டது. இம் மதச் சார்பற்ற நிலைப்பாடு ஒரு வலுவான அம்சமாகவும் நவீன தமிழ்ப் பண்பாட்டுடன் தொடர்புடையதாகவும் இருக்கும் அதே வேளை பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் மதச் சார்பின்மையிலிருந்து வேறுபட்டது.

**வழிகாட்டிக் கோட்பாடு: 2**

**தமிழீழ அரசு மதச்சார்பற்றதாக அமையும். எந்த மதங்களுக்கும் சிறப்பிடம் வழங்கப்பட மாட்டாது.**

## 3. தமிழீழத் தாயகத்திலுள்ள மக்களதும் புலம் பெயர் தமிழ் மக்களதும் முன்னர் புலம் பெயர்ந்த உலகத் தமிழர் சமூகத்தினதும் நலன்பேணல்

இங்கு உலகத் தமிழர் சமூகம் என்பது நீண்ட காலத்திற்கு முன்னர் புலம் பெயர்ந்து தென் ஆபிரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ் மேற்கிந்தியத்தீவுகள் போன்ற இடங்களிலும், மற்றும் ஏனைய இடங்களிலும் வாழும் தமிழ் மக்களைக் குறிக்கிறது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற்பாடுகள் தமிழீழத் தாயகத்திலுள்ள மக்களுக்கும் புலம் பெயர் தமிழ் மக்களுக்கும் உலகத் தமிழர் சமூகத்திற்குமிடையிலான நெருங்கிய தொடர்புகளைப் பேணி அவர்களுக்கிடையோன சமூக பண்பாட்டு உறவுகளை வலுவடையச் செய்வதாக அமைய வேண்டும். தமிழீழ விடுதலையை வென்றெடுக்கும் இலக்கை இது வலுவடையச் செய்வதுடன் தமிழீழத் தாயகத்தில் சமூக பொருளாதார வாழ்வு சீரழிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வை மீள்சீரமைப்பு செய்யவும் துணை புரியும்.

**வழிகாட்டிக் கோட்பாடு: 3**

**மேலே இனங்காணப்பட்ட இலக்கின் அடிப்படையில் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படலாம்**

1. **தாயகத்தின் சுகாதார வசதிகளை மேம்படுத்தத் துணை புரிதல்.**

2. **யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய வீடுகளையும் தங்குமிடங்களையும் அமைத்தல்.**

3. **மக்களுக்கான வீடமைப்புத் திட்டங்களையும் பொதுமக்களுக்குத் தேவையான உட்கட்டுமானங்களையும் அமைப்பதற்குத் துணை புரிதல்.**

4. **மேலே அடையாளப்படுத்தப்பட்ட மூன்று வகையான தமிழர் சமூகங்களையும் சேர்ந்த எந்தத் தமிழருக்கும் இத்தகைய உதவிகள் தேவைப்படுமிடத்து சாத்தியத்தின் அடிப்படையில் அதனை செய்ய வழிவகை செய்தல்.**

5. **புலம் பெயர்ந்த நாடுகளில் ஈழத் தமிழரின் அடையாளத் தனித்துவத்தை வெளிப்படுத்தும் கலை பண்பாட்டு முயற்சிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தமிழர் தமது பண்பாட்டுலகத்துடன் தொடர்புகளைப் பேணிக் கொள்ள உதவுதல்.**

## 4. தாயகத்தின் கல்வி மேம்பாட்டிற்கு உதவுதல்

அனைத்துலக நன்மதிப்பைப் பெறக்கூடிய தமிழ்ப் புலமையாளர்கள் உருவாகுவதனைத் தடுக்கக்கூடிய வகையில், தமிழீழத்தின் கல்விக் கட்டமைப்புக்களைச் சிதைக்கும் மூலோபாயத்தை சிங்கள அரசாங்கங்கள் பின்பற்றி வந்துள்ளன. சிங்கள இராணுவம் அரிய பல நூல்களைக் கொண்டிருந்த பிரபல்யம் மிக்க யாழ் பொது நூலகத்தை எரியூட்டியமை கற்றல் பணிக்கெதிரான மாபெரும் குற்றச் செயலாகும். தமிழர் தாயகத்தின் கல்விப் பாரம்பரியத்தை நாம் மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

**வழிகாட்டிக் கோட்பாடு: 4**

**நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக கல்வி முன்னேற்றத்திற்கு உதவ முடியும்.**

1. **தாயகத்திலுள்ள பாடசாலைகளின் கட்டுமானங்களை மேம்படுத்த உதவுதற்கான நிதியங்களை உருவாக்கல்.**

2. **தாயகத்திலோ, புலம் பெயர் நாடுகளிலோ, உலகத் தமிழ் சமூகத்தின் மத்தியிலோ உள்ள தகமை வாய்ந்த தமிழ் மாணவர்களுக்கு தமது கல்வியினைத் தொடருவதற்கு வாய்ப்பாக புலமைப்பரிசில்களை வழங்குதல்.**

3. **புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாயகத்திலுள்ள கல்வி நிறுவனங்களில் குறுகிய காலத்திற்காவது கற்பித்தல் பணியில் ஈடுபடுவதனை ஊக்குவித்தல்.**

4. **தாயகத்தில் சிறந்த தொழில்நுட்பவியலாளர்கள் உருவாகக்கூடிய வகையில் தொழில்நுட்பக் கல்விக்கான வாய்ப்புக்கனை அதிகரித்தல்.**

## 5. பொருளதார நலன்பேணலை ஊக்குவித்தல்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தாயகத்தின் பொருளாதார நலனை ஊக்குவிக்கும் வகையில் தாயகத்தின் உற்பத்திப் பொருட்களை புலம் பெயர் நாடுகளில் சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்புககளை உருவாக்க வேண்டும். தனது சொந்த தொழில் நிறுவனங்களை உருவாக்குதன் மூலம் இதற்கான வாய்ப்புக்களை மேம்படுத்தலாம்.

வழிகாட்டிக் கோட்பாடு: 5

1. மேற்கூறப்பட்ட இலக்கிற்கு ஏற்ப பல்வேறு புலம் பெயர் நாடுகளில் இயங்கக்கூடிய வகையிலான வர்த்தகப் பேரவையினை உருவாக்குதல். இது தாயகத்திற்கும், புலம்பெயர் நாடுகளுக்கும், உலகத் தமிழ் சமூகத்திற்குமிடையிலான வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்த உதவும்.

2. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தாயகத்தில் புதிய தொழிற்துறைகளை உருவாக்கத் துணை புரிதலும் இதற்கான நிதி மூலங்களைத் திரட்டுதலும்.

3. தாயகத்திலுள்ள நிறுவனங்களுக்கு வர்த்தக வாய்ப்புக்களை அதிகரிக்க உதவக்கூடிய வகையில் வர்த்தக நிறுவனங்களை உருவாக்கல்.

## 6. வெளிநாட்டு உறவுகள்

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சிறிலங்காவில் இன முரண்பாட்டுக்குத் தீர்வாக தமிழீழத் தனியரசு உருவாக வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி செயற்படுவதன் மூலம் இதற்கான சாதகமான சூழலை உருவாக்க முயல வேண்டும். அரசாங்கங்களுடனும் ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்புகளைப் பேணி தமிழீழத்திற்கான ஆதரவுச் சூழலை உருவாக்க முனைய வேண்டும்.

இதற்காக அனைத்துலகச் சமூகத்துடன் தொடர்புகளை வளர்த்தெடுத்தல் முதன்மைப் பணியாக முக்கியம் பெறுகிறது. நாடுவாரியான செயற்பாட்டுக் குழுக்கள் இதற்கென ஒரு பகுதி நிதியினை ஒதுக்க வேண்டும். இதையொட்டிய துறைசார் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வழிகாட்டிக் கோட்பாடு: 6

1. தமிழீழத் தனியரசு உருவாகுவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதற்குத் தேவையான செயற்பாடுகளுக்கான பொறிமுறையை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்க வேண்டும். தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசை தமிழீழத் தனியரசு என்பதனை வெளிப்படுத்தி அனைத்துலகச் சமூகத்தின் ஆதரவைத் திரட்டுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

2. தமிழரின் தேசியப் பிரச்சினையில் தாக்கம் தரக்கூடிய தெற்காசியப்பிராந்திய கொள்கை விவகாரங்களை கற்றறிவதற்கான அறிஞர் குழாம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

3. சுயநிர்ணயக் கோட்பாட்டை வலுப்பெறச் செய்வதுடன் இவ் உரிமையை வென்றெடுப்பதற்காக தமிழர்களாலும் ஏனைய மக்களாலும் நடத்தப்படும் அமைதி வழியிலான ஜனநாயகப் போராட்டங்களுக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும்.

## 7. யுத்தக்குற்றங்கள், மானிடத்திற்கு எதிரான குற்றங்கள், இனஅழிப்பு தொடர்பான குற்ற விசாரணை

அண்மையில் நடந்தேறிய தமிழருக்கெதிரான யுத்தத்தில் சிறிலங்கா அரசாங்கமும் அதன் தலைவர்களும் பாரதூரமான மானிடத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்துள்ளனர். அனைத்துலக சமூகத்தினதும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தினதும் எதிர்கால நன்மை கருதி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் யுத்தக் குற்றவாளிகள் விசாரணை செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படுவதற்கு பொருத்தமான பொறிமுறைகளை ஏற்படுத்துவதற்காக அனைத்துலக நிறுவனங்களுடன் இணைந்து செயற்படும்.

**வழிகாட்டிக் கோட்பாடு: 7**

**தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தக்குற்றங்கள் புரிந்தவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு குற்றங்கள் இழைத்தோர் நீதியின் முன் நிறுத்தப்படுவதை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்**

## 8. பெண்களதும் அனைத்துத் தமிழரதும் சமத்துவத்தைப் பாதுகாத்தல்

தமிழர் விடுதலைப் போராட்டம் தமிழ்ப் பெண்கள் தங்கள் தளைகளை கட்டறுத்துக் கொள்வதற்கும் தமிழ்ச் சமூகம் சாதீய வேறுபாடுளைக் களைந்து செயற்படவும் காரணமாக அமைந்து சமத்துவக் கோட்பாடு வலுப் பெற உதவியது. நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், ஆண்களும் பெண்களும் முழுமையான சட்டபூர்வ சமத்துவத்தை எட்டுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**வழிகாட்டிக் கோட்பாடு: 8**

**தமிழ்ப் பெண்களின் சம உரிமை முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும். புலமைப்பரிசில்கள் மற்றும் ஏனைய வாய்ப்புக்களில் தமிழ்ப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். திருமணங்களின் போதான சீதன முறைமையையும் தமிழ்ப் பெண்களுக்குப் பாதகமாக அமையக்கூடிய ஏனைய வழமைகளையும் இல்லாதொழிக்க நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உழைக்க வேண்டும். தமிழ்ச் சமூகத்திலிருந்து சாதிய முறை இல்லாதொழிக்கப்படுவதற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பாடுபட வேண்டும்.**

## 9. மாவீரர்கள் முன்னாள் போராளிகள் குடும்ப நலன் பேணல்

தமிழ் விடுதலைப் போராளிகள் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் விசேட மரியாதைக்குரிய இடத்தைப் பிடித்தவர்கள். இத்தகைய மாவீரர்களதும் முன்னாள் போராளிகளதும் குடும்பங்களின் நலன் பேணுவதனை தனது கடமையாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வரித்துக் கொள்கிறது. இதற்காகக் கல்விப் புலமைப்பரிசில்கள், வாழ்வாதாரத் திட்டங்கள், மாதாந்தக் கொடுப்பனவுகள், சுகாதாரப் பராமரிப்பு, சட்ட உதவிகள், குடும்ப அங்கத்தவர்களைத் தேடிக் கண்டு பிடித்தல், குடும்ப மீள் இணைவு, சிறைகளில் இருந்து விடுவிக்கப்படல், வாழ்வை மீளக் கட்டியெழுப்பவதற்கான உதவி, ஆற்றுப்படுத்தலும் அது போன்ற சேவைகளும் போன்ற திட்டங்களை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுக்கலாம். அமெரிக்காவில் அமைக்கப்பட்டுள்ள யுத்த வீரர்கள் விவகாரச் செயலகம் போன்ற இத்தகைய

திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்புக்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான முயற்சிகளையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

**வழிகாட்டிக் கோட்பாடு: 9**

**மாவீரர்களினதும் முன்னாள் போராளிகளினதும் குடும்ப நலன் பேணும் செயற்திட்டத்திற்கு நாடு கடந்த அரசாங்கம் ஒரு விசேட குழுவினை அமைத்துச் செயற்படும்.**

## 9. முடிவுரை

தமிழ் பேசும் மக்களின் மத்தியில் பல்வேறு தரப்பினருடன் கலந்து பேசியும், எழுப்பப்பட்ட வெவ்வேறு வகையான வினாக்களைக் கவனத்திற் கொண்டும் கலந்துரையாடலுக்கான அரங்குகளில் பங்கு பற்றியும் மதியுரைக்குழு இவ் அறிக்கையினைத் தயார் செய்தது. இதற்கான கருத்துப்பரிமாற்றப் கூட்டங்களும் கலந்துரையாடல் அரங்குகளும் ஒழுங்கு செய்யப்பட்டு கருத்துக்கள் பெறப்பட்டன. இவ் அறிக்கையினை முன்னேற்றுவதற்காக முன்மொழியப்பட்டிருந்த பெரும்பாலான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் உள்ளடக்கியே இவ் இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

இம் முன்னெடுப்பு தொடர்ச்சியாக வளர்ந்து செல்லக்கூடிய ஒரு படிமுறையாக அமைந்துள்ளமையால் இது தொடர்பான மக்களின் உள்ளீடுகள் இதன் வளர்ச்சிக்கு முக்கியமானதொன்றாக அமைந்துள்ளன. அறிக்கையினைத் தயார் செய்யும் பணி இத்துடன் நிறைவு பெறினும்கூட மக்களுடனான தொடர்புகள் அனைத்துலகச் செயலகத்தினால் அச்சு மற்றும் மின்னியல் வழிமுறைகளூடாகப் பேணப்படும். அனைத்துலகச் செயலகத்தால் பெறப்படும் சகல கருத்துக்களும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியலமைப்புச் சபைக்கு அனுப்பி வைக்கப்படும். அரசியலமைப்புச் சபை மக்களுடனான தொடர்புகளுக்கும் கருத்துப்பரிமாற்றங்களுக்கும் தனது பொறிமுறை ஒன்றினை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தொடர்புகளுக்கான மின்னஞ்சல் முகவரி: info@govtamileelam.org**